


வட்டுக்கோட்டை வடக்கை

பிறப்பிடமாகவும் வசிப்பிடமாவும் கொண்ட

# திருமதி செல்வரத்தினம் வேலாயுதம்பிள்ளை

அவர்களின் நீங்காத நினைவுகளின்

## நினைவுப் பதிவேடு

23.02.2015

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ

"வையத்துள் வாழ்வாங்கு வாழ்பவன்
வானுறையுள் தெய்வத்துள் வைக்கப்படும்"



**தோற்றம்**
**27.10.1928**

**மறைவு**
**24.01.2015**

## அமரர்
## திருமதி. வேலாயுதம்பிள்ளை செல்வரத்தினம் (*சீமாட்டி*)
## அவர்கள்

### திதி வெண்பா

ஆண்டு விஜயத்தின் தை மாதப் பஞ்சமியில்
வேண்டிவரும் பூர்வ பட்சக் காலத்தான்- நீண்ட புகழ்
செல்வரத்தினம் என்கின்ற தாயார் எமைப் பிரிந்து
நல்லிறைவன் தாள்சேர்ந்த நாள்.

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சமர்ப்பணம்

அன்பின் இருப்பிடமாய் எமையெல்லாம்
பாசத்துடன் ஆதரித்து என்றும்
எமது முன்னேற்றமே வாழ்வின் இலக்காகக்
கொண்டிருந்து 24.01.2015 அன்று அமரத்துவமடைந்த
எங்கள் அன்புத் தெய்வத்தின் பாதக் கமலங்களுக்கு
**காணிக்கையாக**
இந் நினைவுப் பதிவேட்டினை சமர்பிக்கின்றோம்.


ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!

இங்ஙனம்
குடும்பத்தினர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பஞ்சபுராணம்



## விநாயகர் துதி

ஐந்து கரத்தனை ஆனை முகத்தனை
இந்தின் இளம்பிறை போலும் எயிற்றனை
நந்திமகன்தனை ஞானக் கொழுந்தினைப்
புந்தியில் வைத்தடி போற்றுகின்றேனே!

## தேவாரம்

மற்றுப்பற்றெனக் கின்றிநின் றிருப்பாதமே மனம் பாலித்தேன்
பெற்றலும் பிறந்தேனினிப் பிறவாத தன்மை வந்தெய்தினேன்
கற்றவர்தொழுதேத்துஞ் சீர்க்கரையூரிற் பாண்டிக் கொடுமுடி
நற்றவாவுனை நான் மறக்கினுஞ் சொல்லு நாநமச்சிவாயவே.

## திருவாசகம்

பாரொடு விண்ணாய்ப்பரந்த வெம்பரனே
பற்றுநான் மற்றிலேன் கண்டாய்
சீரொடுபொலிவாய் சிவபுரத்தரசே
திருப்பெருந்துறையுறை சிவனே
ஆரொடு நோகேனார்க் கெடுத்துரைக்கே
னாண்ட நீயருளிலையானால்
வார்கடலுலகில் வாழ்கிலேன் கண்டாய்
வருகவென்றருள் புரிவாயே.

## திருவிசைப்பா

கற்றவர் விளங்கும் கற்பகக் கனியை
கரையிலா கருணைமா கடலை
மற்றவர் அறியா மாணிக்க மலையை
மதிப்பவர் மனமணிவிளக்கை
செற்றவர் புரங்கள் செற்றவெம் சிவனை
திருவீழி மிழலை வீற்றிருந்த
கொற்றவன் தன்னை கண்டுகண்டுள்ளம்
குளிர என் கண்கள் குளிர்ந்தனவே!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## திருப்பல்லாண்டு

பாலுக்குப் பாலகன் வேண்டிய அழுதிட
பாற்கடல் ஈந்தபிரான்
மாலுக்குச் சக்கரமன்றருள் செய்தவன்
மன்னியதில்லை தன்னுள்
ஆலுக்கு மந்தணர் வாழ்கின்ற தில்லைச்
சிற்றம் பலமே இடமாகப்
பாலித்து நட்டம் பயிலவல்லானுக்கே
பல்லாண்டு கூறுதுமே!

## திருப்புராணம்


இறவாத இன்ப அன்பு வேண்டிப் பின் வேண்டுகிறார்
பிறவாமை வேண்டும் மீண்டும் பிறப்புண்டேல் உன்னையென்றும்
மறவாமை வேண்டும் இன்னும் வேண்டும் நான் மகிழ்ந்துபாடி
அறவா நீ ஆடும் போதுன் அடியின் கீழ் இருக்கவென்றார்.

## திருப்புகழ்

சரணகமலா லயத்தை அரைநிமிஷ நேரமட்டில்
தவமுறை தியானம் வைக்க அறியாத
சடகசட மூடமட்டி பவவினையி லேசனித்த
தமியன்மிடி யால் மயக்கம் உறுவேனோ
கருணையுரி யாதிருப்ப தெனகுறையி வேளைசெப்பு
கயிலைமலை நாதர்பெற்ற குமரோனே
கடகபுய மீதிரத்ன மணியணிபொன் மாலைசெச்சை
கமழுமண மார்கடப்பம் அணிவோனே
தருணமிதை யாமிகுந்த கனமீது நீள்சவுக்ய
சகலசெல்வ யோகமிக்க பெருவாழ்வு
தகைமைசிவ ஞானமுத்தி பரகதியு நீகொடுத்து
தவிபுரிய வேணுநெய்த்த வடிவேலா
அருணதள பாதபத்ம மதுநிதமு மேதுதிக்க
அரியதமிழ் தானளித்த மயில்வீரா
அதிசயம நேகமுற்ற பழனிமலை மீதுதித்த
அழகதிரு வேரகத்தின் முருகோனே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



திருமண ஆண்டின் தோற்றம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வாழ்த்து

வான்முகில் வழாது பெய்க மலிவளம் சுரக்க மன்னன்
கோன் முறை யரசு செய்க குறைவிலா துயிர்கள் வாழ்க
நான் மறை யறங்கள் ஓங்க நற்றவம் வேள்வி மல்க
மேன்மை கொள் சைவ நீதி விளங்குக உலகமெலாம்.

திருச்சிற்றம்பலம்

## அமைதி பெறுங்கள் அம்மாவே!

மாணிக்க ரத்தினமே, சண்முகரத்தினமே, செல்வரத்தினமே, வேலாயுத ரத்தினமே, எங்கள் அம்மாவே நீங்கள் போய்விட்டீர்கள். அதுவும் இன்றுடன் 31 நாளாகின்றன. எங்களை விட்டுப் பிரிந்து நீங்கள் மீண்டுவராத உலகுக்குச் சென்று விட்டீர்கள். உங்கள் உதரத்தில் உதித்த உறவுகள் நாங்கள் கலங்கிக் கதறியும் பயனில்லை. ஏன்று தெரிந்தாலும் ஆற்றுவாரும் தேற்றுவாரும் இருந்தும் கரைந்து மாய்கின்றோம். 1993இல் அப்பாவை இழந்தோம். உங்கள் ஆதரவில் அமைதியானோம். இப்போ நீங்களும் எங்களைப் பிரிந்து விட அனாதைகளான எங்களுக்கு இனி ஆரம்மா செல்வச் சீமாட்டியே?

எங்கள் அம்மப்பா கந்தையா சண்முகத்திற்கும் அம்மம்மா ஆறுமுகம் மாணிக்கத்திற்கும் இரண்டாவது புத்திரியாக 27.10.1928 இல் பிறந்தீர்கள். உங்களின் அக்காவான தங்கரத்தினம் (அம்மா) ஆறுமுகம் புண்ணியமூர்த்தி (அரச சித்த ஆயுள்வேத வைத்தியர்) அவர்களையும், நீங்கள் (சீமாட்டி) அப்பாவையும் (கிருஷ்ணர் - சிவக்கொழுந்து தம்பதியின் இரண்டாவது மகன் வேலாயுதம்பிள்ளை- 1947 டிசம்பரில் திருமணம்), உங்களின் தங்கையான அழகரத்தினம் (ராசா) பொன்னம்பலம் தெய்வேந்திரம் (பொன்னம்பலம் அன் சன்ஸ் நகை வாணிபம்) அவர்களையும், இரண்டாவது தங்கையான பாக்கியரத்தினம் (பாமா) வேலுப்பிள்ளை பொன்னம்பலம் (பாக்கியரத்தினம் ஹாட்வெயர் ஸ்ரோர்ஸ்) அவர்களையும் ஒரே அருமைத்தம்பி லோகேஸ்வரன் வேலைப்பரிசோதகர் கட்டடத்திணைக்களம்)வேலுப்பிள்ளை மஞ்சுளா அவர்களையும்திருமணம் செய்து கொண்டீர்கள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இவர்போல் எவரோ எனுமளவுக்கு நல்லதோர் மனைவியாக, தாயாக, மாமியாக, பேர்த்தியாக, பூட்டியாக வாழ்ந்தீர்களே. உங்கள் சேலையிலே ஏணை கட்டி தாலாட்டுப் பாடி எங்களை உறங்கவைத்ததை மறக்க முடியுமா? கஞ்சிவடிக்கும்போதும் எங்களை உங்கள் மடியில் பாதுகாத்து தாங்கி சமையலையும் உரிய வேளைக்கு முடித்து பசி அறியாதவர்களாக, தெரியாதவர்களாக வளர்த்ததை மறக்க முடியுமா? அப்பாவும் நீங்களுமாக முற்றத்து மணல் அள்ளி, முன் விறாந்தைப் படி பரப்பி, மடியிருத்தி எங்கள் கை பிடித்து அ... ஆ... எழுதப் படிக்கக் கற்றுத் தந்தீர்கள். எங்களை வளர்க்க நீங்கள் இருவரும் பட்ட பாட்டைத்தான் நாம் மறந்துவிட முடியுமா? எங்களுக்கு உணவளிக்கும்போது "தான் தின்னி பிள்ளை வளராள் தவிடு தின்னி கோழி வளராள்" என்று ஊட்டியதையும் நாங்கள் குழப்படி செய்யும்போது "பொல்லாப்பிள்ளையில் இல்லாப்பிள்ளை" என்று கண்டித்து வளர்த்ததையும் மறக்க முடியுமா? எங்களுக்கு நோயென்று வந்தபோதெல்லாம் மருத்துவரிடம் கொண்டு திரிந்ததை, விழிமூடித்தூங்காதிருந்ததை மறக்கமுடியுமா? நிவர்த்திக் கடன் வைத்து (நேர்ந்து) கோயில் கோயிலாகக் கொண்டு சென்றதை மறக்க முடியுமா? பஞ்சம்போம் பஞ்சத்தில் பட்ட வடுபோகுமா" என்று சொல்லி வடு சுமந்து வாழாத வாழ்வை எமக்களித்ததை மறக்க முடியுமா? "எடி சீமாட்டி, பாலன் பஞ்சம் பத்து வருசமடி" என்று அம்மப்பாவின் தங்கையான உங்கள் செல்லம்மா மாமி உங்களுக்கு ஆறுதல் சொன்னதை, தேறுதல் சொன்தை மறக்க முடியுமா? நீங்களும் அப்பாவுமாக எங்களை நெறிப்படுத்தியதை மறக்க முடியுமா?

உங்களின் சீரிய வளர்ப்புத்தான் உங்கள் பிள்ளைகளை வெளிநாடுகளில் வதிபவர்கள் உட்பட தந்தைவழி மைந்தர்களாக மது அருந்தாதவர்களாக்கியதை மறக்க முடியுமா? எங்கள் பதின்மரையும் உயர்கல்வி பெற வைத்ததைத்தான் மறக்க முடியுமா? உங்கள் தலைமகன் கிருஸ்ணானந்தனுக்கு B.A (ஓய்வு ஆசிரியர் கூட்டுறவுப் பயிற்சிக் கல்லூரி) லோகேஸ்வரியை திருமணமாற்றி சத்தியன் - பாமா திருமணம் மூலம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கிருஷ்ணா, ரவீனா, ஆனந்தசயனி, Dr . செந்தூரன் (ஆதா வைத்திய சாலை தெல்லிப்பழை)- சிவஜெனனி திருமணம் மூலம் அக்ஷரா: இரண்டாம் மகன் கவீர்ந்திரனுக்கு ( ஒய்வு பணியாளர், யாழ் போதனா வைத்தியசாலை) திலகேஸ்வரியை ( ஒய்வு பணியாளர், யாழ் போதனா வைத்தியசாலை) திருமணமாற்றி தர்மினி (முகாமைத்துவ உதவியாளர், யாழ் பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் அலுவலகம்) - மனோகாந் திருமணம் மூலம் வர்ஷினி, சருஜா: அடுத்த மகன் தயானந்தனுக்கு (கனடா) புஸ்பராணியைத் திருமணமாற்றி லவன், லாவண்ணியா: தலைமகள் வாணிக்கு பொன்னையா இராசரத்தினத்தை (பரந்தன் இரசாயனக் கூட்டுத்தாபன ஓய்வுப் பணிப்பாளர்) திருமணமாற்றியும்: அடுத்த மகள் ஜீவாவிற்கும் அரியகுட்டி வீரசிங்கத்தை (சிற்றி மெடிக்கல்ஸ்) திருமணமாற்றி சிவாஜினி B.A (சுவிஸ்) - சர்வேஸ்வரன் திருமணம் மூலம் தாமிரா; சிவாகரன் B.Sc, Dip.in Edu, M.Ed (Reading) (கணித ஆசிரியர் வட்டு இந்துக் கல்லூரி): மூன்றாவது மகள் உமாவுக்கு சின்னத்தம்பி கிருஷ்ணகுமாரைத் (மின்னிணைப்பாளர்) திருமணமாற்றி துவாரகா (அமெரிக்கா)- பிரசாத் திருமணம் மூலம் சுஜீத், சுவீதா; யசோதரா (பிரான்ஸ்)- குணதாசன் திருமணம் மூலம் லக்ஷன், வருண்; தனாளினி: அடுத்த மகள் கலாவுக்கு (ஜேர்மனி) பாலசிங்கம் நடேசலிங்கத்தை திருமணமாக்கி சிந்துஜா, பார்த்திபன் : நான்காவது மகன் ரவீந்திரனுக்கு (ஜேர்மனி) ரத்தினகுமாரியைத் திருமணமாற்றி ரவிக்குமார் (தொலைதொடர்பு இணைப்பாளர்) - ரிதுஷா; ரவிதா (முன்பள்ளி ஆசிரியர் ): கனிஷ்ட புதல்வி மாலாவுக்கு அரிய குட்டி பரமேஸ்வரனை (கட்டட ஒப்பந்தகாரர்) திருமணமாற்றி சர்மிலா B.A (ஆங்கில ஆசிரியர் கிளிநொச்சி இந்துக் கல்லூரி )- சிவகணேசன் திருமணம் மூலம் சுவாதிகன்; ஹேமச்சந்திரா (சித்தமருத்துவம் - இறுதியாண்டு ), சதுர்வேதன், கண்ணன்: கனிஷ்ட புதல்வன் புலேந்திரனுக்கு (தொழில்நுட்ப உத்தியோகத்தர் வலி மேற்குப் பிரதேச சபை) தவச்செல்வியைத் திருமணமாற்றி கோகிலன் ஆரணி ஆகியோரைப் பேரப்பிள்ளைகளாகக் கண்டதுடன், இவர்கள் வழி பூட்டப்பிள்ளைகளையும் கண்டு மகிழ்ந்தீர்கள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பிரமனாச்சி தோட்ட கற்பகப் பிள்ளையார் கோவில் முதலாம் திருவிழா உபயத்திற்கு 1980 ஆம் ஆண்டில் எமக்குத் திருவருள் வாய்த்தபோது, முதலாம் திருவிழா கோவில் முகாமைக்குரியது எனத் தெரிவிக்கப்பட்டதற்கு "எனது பிள்ளை செய்தாலும் ஒன்றுதான் தங்கச்சி பிள்ளை செய்தாலும் ஒன்றுதான்" என ஒரு வசனத்தில் முடித்துவிட்ட பெரியம்மாவையும் இழந்து, அம்மம்மாவின் பிள்ளைகளது குடும்ப நிகழ்வுகளையெல்லாம் திட்டமிட்டு வழிநடத்திய ஆசையம்மாவையும் இழந்து, கொழும்பில் வசித்தாலும் தனது அக்கைகளைக்காண என ஓடிவரும் ஒரே ஒரு மாமாவையும் இழந்து விட்டாலும் தனக்கிருக்கும் ஒரே தொப்புள்கொடி உறவென உங்களுடன் ஒட்டியிருந்த சீனியம்மா, "சின்னக்கா வடிவா றேந்தை பின்னுவா, சின்னக்கா நல்லா ஆர்மோனியம் வாசிப்பா, சின்னக்காவுக்குத்தான் முதன்முதல் இந்த ஊருக்குள் பதக்கம் சங்கிலி வந்தது" என்று மூச்சுக்கு மூச்சு உங்களை ஏத்தும் சீனியம்மா, தனியனாகி விட்டதாகத் தவிக்கின்றா. அன்று உங்களுக்கொரு குஞ்சாச்சி (திருமதி.வீ. பகவதி)போல் இன்று எங்களுக்கு ஒரு சீனியம்மாதான்.

எங்கள் அப்பாவின் சகோதரர்களான அமரர்கள் அக்கா செல்லமுத்து அம்பலவாணர், அண்ணர் வைரமுத்து (பிரசித்த நொத்தாரிஸ்), தங்கை சீதேவிப்பிள்ளை செல்லத்துரை, தம்பி தாமோதரம்பிள்ளை (ஓய்வு அதிபர்) ஆகியோகியோருடனும் கனடா வாழ் தங்கை சரஸ்வதி கனகரத்தினம், வட்டக்கச்சிவாழ் தம்பி தில்லைநாதன் (ஓய்வு அரசினர் பண்ணை முகாமையாளர்) ஆகியோருடனும் நீங்கள் பண்புடனும் பாசத்துடனும் பழகியதை "மச்சாள்" என உங்களை அவர்கள் கனிவாக அழைப்பதிலிருந்தே தெளிந்து கொள்ளலாம் அம்மா.

தம் பேரப்பிள்ளைகள் மீது கொழுத்த பாசத்தைக் காட்டிய அம்மப்பாவை, அம்மம்மாவை எமக்களித்த உங்களை மறக்க முடியாது. உங்களின் பெண் பிள்ளைகளை, தன் பிள்ளைகள் என்றே கொண்டு அவர்களின் வாழ்வுக்குச் சீர் அளித்த சீனிஐயாவை இளைய மைத்துனராகக் கொண்ட உங்களை மறக்க முடியாது அம்மாவே! எங்களை ஏணையில் வைத்துத் தாலாட்டும் போது "ஆராரோ ஆரிவரோ ஆரடித்து நீர் அழுதீர் அழுதாரைச் சொல்லி அழும்" என்று பாடுவீர்கள், நாங்களும் உறங்கி விடுவோம். இன்றோ நாம் அழுகின்றோம், உறங்கவைக்கத்தான் நீங்கள் இல்லையே அம்மா.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



1985 ஆண்டின் தோற்றம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இங்கும், இந்தியா - சிதம்பரம் உட்பட பல ஆலயங்களைத் தரிசிக்கும் பேறுபெற்ற நீங்கள். எங்களின் மூச்சுக் காற்றே உங்களின் உயிர் மூச்சு என வாழ்ந்தீர்கள். நான் செத்தால் என்ரை பத்து பேரும் என்னைச் சுற்றி நின்று அழுதால் அது போதும் என்பீர்கள். ஊங்கள் விருப்பம் தான் நிறைவேறி விட்டதே அம்மா. வெளிநாட்டிலிருந்து வரமுடியாத நிலையில் இருந்த உங்கள் மூன்று பிள்ளைகளையும் உங்களில் புனித ஆன்மா இழுத்துவந்து உங்களைச் சுற்றி நின்று ஓலமிட வைத்துவிட்டதே அம்மா.

எங்கள் குடும்ப நிகழ்வுகளின்போது "சீமாட்டி குறூப்" நிற்கிறது எனப் பெருமையின்றி அடக்கமாகச் சொல்லிக் கொள்வோம். உங்களது விருப்பமும் அதுதான் என்பதை உங்களின் அந்த ஆசையின் உள்ளார்த்தம் சொல்லாமல் சொல்லி நிற்கிறது. அம்மா, உங்கள் ஆன்மாவின் ஆசியை வேண்டி நிற்பதுடன், உங்கள் ஆன்மா இனி ஒரு பிறப்புமின்றி அமைதி பெற்று பெருஞ்சாந்தி காண பிரமனாச்சித்தோட்ட கற்பகனதும் கொத்தன்வளவு ஞானவைரவரதும் கழலடிகளைத் தொழுது இறைஞ்சுகிறோம். அமைதி பெறுங்கள் எங்கள் அம்மாவே! சாந்தி பெறுங்கள் சீமாட்டியே!

ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தமிழ் நூல்களும் அவற்றின் ஆசிரியர்களும்

| நூல்கள் | ஆசிரியர்கள் |
|---|---|
| சிலப்பதிகாரம் | இளங்கோவடிகள் |
| நளவெண்பா | புகழேந்திப்புலவர் |
| சீறாப்புராணம் | உமறுப்புலவர் |
| நல்வழி நூல் | ஔவையார் |
| பாஞ்சாலி சபதம் | சுப்பிரமணியபாரதியார் |
| யாழ் நூல் | விபுலானந்த அடிகள் |
| ஆசியஜோதி | தேசிக விநாயகம்பிள்ளை |
| மேகநாதம் | கவிகாளிதாசர் |
| கோடை | மகாகவி |
| இயேசு காவியம் | கண்ணதாசன் |
| ஆசாரக்கோவை | அப்துல் மஜீதுபுலவர் |
| சீவக சிந்தாமணி | திருத்தக்க தேவர் |
| திருப்புகழ் | அருணகிரிநாதர் |
| பெரியபுராணம் | சேக்கிழார் |
| கந்தபுராணம் | கச்சியப்பசிவாச்சாரியார் |
| கம்பராமாயணம் | கம்பர் |
| திருக்குறள் | திருவள்ளுவர் |
| குண்டலகேசி | நாதகுந்தனார் |
| திருமுருகாற்றுப்படை | நக்கீரர் |
| மனோன்மணியம் | சுந்தரம்பிள்ளை |
| அகத்தியம் | அகத்தியர் |
| நைடதம் | அகலிராம பண்டிதர் |
| அபிராமி அந்தாதி | அபிராமிப்பட்டர் |
| குறிஞ்சிப்பாட்டு | கபிலர் |
| தக்கயாகப்பரணி | ஒட்டக்கூத்தர் |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## நமது நாட்டின் தேசியக்கொடியில் காணப்படும் பின்வருவன குறிக்கும் கருத்துக்கள்

1. சிங்கத்தின் தலை - நாட்டின் தலைவர்
2. சிங்கத்தின் உடல் - வீரம்
3. சிங்கத்தின் வாலும் வாளும் - நீதி நேர்மையுள்ள ஆட்சி
4. வெள்ளரசு இலை (நான்கு)- அன்பு, கருணை, அனுதாபம்,சமத்துவம்
5. இடது பக்கமுள்ள செம்மஞ்சள் நிறம் - தமிழர்
6. பச்சை நிறம் - முஸ்லிம்கள்
7. சுற்றியுள்ள மஞ்சள் நிறம் - இலங்கையின் அறிவாற்றல்
8. சிங்கத்தைச் சுற்றியுள்ள காவிநிறப்பின்னணி - பெரும்பான்மை சிங்களவர்

## இலங்கை பற்றிய தகவல்கள்

இலங்கையின் தேசிய பறவை - காட்டுக்கோழி

இலங்கையின் தேசிய மலர் - நீலோற்பலம்

இலங்கையின் தேசிய மரம் - நாகமரம்

இலங்கையின் தேசிய கொடி - வாளேந்திய சிங்கம்

இலங்கையின் தேசிய உணவு - நெல்லரிசிச் சோறு

இலங்கையின் முதலாவது பெண் ஜனாதிபதி

- திருமதி சந்திரிக்கா பண்டாரநாயக்க குமாரதுங்க

இலங்கையின் முதலாவது பெண் பிரதமர்

- திருமதி சிறிமாவோ பண்டாரநாயக்க

இலங்கையில் இலவசக் கல்வியை அறிமுகம் செய்தவர்

- C.W.W கன்னங்கரா

இலங்கையின் தேசிய கீதத்தை இயற்றியவர்

- ஆனந்த சமரக்கோன்

இலங்கையின் தேசிய விளையாட்டுக்கள்

- எல்லே, கரப்பந்தாட்டம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ஆண்டுகளும் விழாக்களும்

| | | |
|---|---|---|
| 1 வது | ஆண்டின் இறுதியில் கொண்டாடப்படும் விழா | - கான் விழா |
| 5 வது | ஆண்டின் இறுதியில் கொண்டாடப்படும் விழா | - மர விழா |
| 10வது | ஆண்டின் இறுதியில் கொண்டாடப்படும் விழா | - தகர விழா |
| 12 வது | ஆண்டின் இறுதியில் கொண்டாடப்படும் விழா | - தோல்விழா |
| 15வது | ஆண்டின் இறுதியில் கொண்டாடப்படும் விழா | - பளிங்கு விழா |
| 20வது | ஆண்டின் இறுதியில் கொண்டாடப்படும் விழா | - ரீங்கான் விழா |
| 25வது | ஆண்டின் இறுதியில் கொண்டாடப்படும் விழா | - வெள்ளி விழா |
| 60வது | ஆண்டின் இறுதியில் கொண்டாடப்படும் விழா | - வைரவிழா மணிவிழா |
| 75வது | ஆண்டின் இறுதியில் கொண்டாடப்படும் விழா | - வைச்சீர விழா / பவளவிழா |
| 100வது | ஆண்டின் இறுதியில் கொண்டாடப்படும் விழா | - நூற்றாண்டுவிழா |

## "பஞ்ச"த்தின் பெருமை

பஞ்சாங்கம் :- திதி. வரம், கரணம், யோகம், நட்சத்திரம்,

பஞ்ச நிலை :- பாலை, குறிஞ்சி, மருதம், முல்லை, நெய்தல்,

பஞ்ச வர்ணம் :- பச்சை, கருமை, செம்மை, வெண்மை, மஞ்சள்

பஞ்சமாபாதகம் :- குருநிந்தை, கள், காமம், கொலை,கொள்ளை

பஞ்ச பொறி :- மெய், வாய், கண், மூக்கு, செவி

பஞ்ச பூதம் :- நிலம், தீ, நீர், காற்று, வானம்.

பஞ்ச புலன் :- நாற்றம், சுவை, ஒளி, ஊறு, ஓசை.

பஞ்ச இலக்கணம் :- அணி, எழுத்து, பொருள், சொல், யாப்பு.

பஞ்ச இரத்தினம் :- மகரதம், முத்து, பொன், மாணிக்கம்,சுகர்த்தி.

பஞ்ச காவியம் :- குண்டலகேசி, வளையாபதி, சிலப்பதிகாரம், சீவக சிந்தாமணி, மணிமேகலை.

பஞ்ச பாண்டவர் :- தருமன், வீமன், அர்ச்சுனன், நகுலன், சகாதேவன்.

பஞ்ச பந்தம் :- கற்பூரம், இலவங்கம், ஏலம், சாதிக்காய், தக்கோலம்.

பஞ்ச பட்சி :- ஆந்தை, காகம், மயில், கோழி, வல்லூறு.

பஞ்ச புராணம் :- தேவாரம், திருவாசகம், திருவிசைப்பா, திருப்பல்லாண்டு, பெரியபுராணம்.

பஞ்ச கௌவியம் :- பால், தயிர், நெய், கோமீயம், கோமயம்.

பஞ்ச உலோகம் :- செம்பு, ஈயம், பொன், வெள்ளி, இரும்பு.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## உயர் குருதி அமுக்கமும் மாரடைப்பும்
## Hyper Tension (H.T) and Heart Attack

மாரடைப்பு ஏற்படுத்துவதற்கான முக்கிய காரணிகளில் குருதி அமுக்கமும் ஒன்றாகும். உயர் குருதி அமுக்கமானது நுரையீரல் சுற்றோட்டத்தில்( Pulmonary HT ) தொகுதிச் சுற்றோட்டத்தில் (Systemic HT) ஏற்படலாம்.

சாதாரணமாக உயர் குருதி அமுக்கம் என்பது தொகுதிச் சுற்றோட்டத்தில் ஏற்படும் உயர்அமுக்கத்தையே வகைக்குறிக்கும்.

தொகுதி உயர் குருதி அமுக்கமானது தொகுதிப் பெருநாடிச் சுருக்கம் ( Ciarctation of Aorta ), சிறுநீரகவியாதிகள் ( Kidney Disease), அகஞ் சுரக்கும் சுரப்பிகளில் ஏற்படும் வியாதிகளில் ( Endocrine Disorders ), மருந்து வகைகள் ( Drugs ), கர்ப்பம் தரித்த நிலை (Pregnancy) ஆகியவற்றாலும் Secordary HT - அல்லது குறிப்பிடத்தக்க காரணமேதுமின்றியும் - Essential HT ஏற்படலாம்.

உயர் குருதி அமுக்கத்தினால் இதயம், சிறுநீரகம், கண், நரம்புத் தொகுதி என்பன பாதிப்புக்குள்ளாகலாம்.

## உயர் குருதி அமுக்கம் ஏற்பட ஏதுவான காரணிகள்

தவிர்க்க முடியாத காரணிகள் :

1. வயது அதிகரித்தல்.
2. பரம்பரையில் உயர் குருதி அமுக்கம் இருத்தல்.

தவிர்க்க கூடிய காரணிகள் :

1. உடல் நிறை அதிகரித்தல்.
2. அதிக உப்பு கொழுப்புணவு உண்ணுதல்.
3. புகை பிடித்தல், அதிக மதுமானம் அருந்துல்.
4. உளநெருக்கீட்டு வாழ்க்கை (Stressful life )
5. மருந்து வகைகள் (கருத்தடை மாத்திரைகள் ) பிறநோய்கள் - சலரோகம்
6. உடற்பயிற்சி குறைந்த வாழ்க்கை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## நோயாளர் கவனிக்க வேண்டியவை.

1. தங்கள் நோய்கான காரணம் ஏதாவது இருப்பின் Secordary / HT அதை முற்றாக நீக்கினாலோ அல்லது கட்டுப்படுத்தினாலோ தவிர தாங்கள் தொடர்ந்தும் மருத்துவக் கண்காணிப்பின் கீழ் மருந்து உட்கொள்ள வேண்டி இருக்கும் என்பதைக் கவனத்தில் கொள்ள வேண்டும்.
2. கிரமமாக கிளினிக் செல்வதுடன் மருந்தை நேரம் தவறாது உட்கொள்ள வேண்டும். (குருதி 140/90 இலும் குறைவாய் இருத்தல் விரும்பத்தக்கது)
3. உடல் நிலையில் ஏதாவது மாற்றம் தென்படின் உடனடியாக வைத்திய ஆலோசனையைப் பெற வேண்டும்.
4. சமையலுக்கு மேலதிகமாக உப்புச்சேர்த்தல், உப்பூட்டிய உணவு வகைகள் (கருவாடு, ஊறுகாய், மோர் மிளாய்) என்பவற்றைத் தவிர்த்தல் தேங்காய்ப் பால், தேங்காய் எண்ணெய், கொழுப்பு, அதிகமான இறைச்சி வகைகள், பாற்பொருட்கள், முட்டை மஞ்சட்கரு, அதிகபால், நண்டு, இறால், கணவாய் ஆகியவற்றைத் தவிர்த்தல் அல்லது குறைத்தல் வேண்டும்.
5. உடல் நிறையை வயது, உயரம் என்பவற்றிற்கு ஏற்பப் பேண வேண்டும்.
6. நாளாந்தம் உடற்பயிற்சி செய்தல் விரும்பத்தக்கது.
7. புகைத்தல், அதிக மதுபானம் அருந்துதல் ஆகியவற்றைத் தவிர்த்தல் நல்லது.
8. உள நெருக்கீடு ஏற்படக் கூடிய சூழல், நிலைமை என்பவற்றைத் தவிர்த்தல் நல்லது. தியானம், யோகாசனம் விரும்பத்தக்கது.
9. தங்கள் நோய் பற்றிய குறிப்பொன்றைத் தங்களுடன் எப்போதும் எடுத்துச் செல்வது விரும்பத்தக்கது.

## மாரடைப்பைத் தடுப்பதற்கான வழிமுறைகள்

மாரடைப்பு, அன்ஜைனா (முடியுரு நாடி சம்பந்தமான இதய நோய்கள்) ஆகியவற்றைத் தடுப்பதற்கான வாழ்வியல் வழிமுறைகள் கீழ்வருமாறு.

1. மாரடைப்பைத் தடுப்பதற்கான மருந்துகளைப் பாவித்தல்.
2. முறையான தேகப் பயிற்சி செய்தல்.
3. உடல் நிறையை செப்பனமாகவும், சீராகவும் பேணுதல்.
4. கொழுப்பு,கொலஸ்ரோல், உள்ள உணவு வகைகளை மேலதிகமாகச் சேர்த்து கொள்ளுதல்.
5. மருத்துவத் தன்மையான உணவு வகைகளை மேலதிகமாகச் சேர்த்து கொள்ளுதல்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

6. புகை பிடித்தலை நிறுத்துதல், புகைக்காமை
7. நீரிழிவு, உயர்குருதியமுத்தம் ஆகிய நோய்களைக் கட்டுப்படுத்தல்
8. மன அழுத்தத்தைத் தவிர்த்தல்.
9. மருந்துகள் மூலம் குருதிக் கொழுப்புகளைக் கட்டுப்படுத்துதல்
10. சத்திரசிகிச்சை முறைகள் மூலம்முடியுரு நாடியில் குருதியோட்டத்தை மீளச் சீராக்கிக் கொள்ளல்.
11. ஆழ்நிலைத் தியானத்தையும், யோகாசனத்தையும் கடைப்பிடித்தல்.

## மாரடைப்பைத் தடுப்பதற்கான மருந்துகள்

மாரடைப்பு இதயத்திற்கு குருதி வழங்கும் குருதிக் குழாய்களினுள் குருதிக் கட்டி உருவாகுவதால் உருவாகிறது. குருதிக் குழாய்களினுள் குருதிக்கட்டி உருவாகுவதைத் தடுப்பதற்கு சில மருந்துகள் தற்காலத்தில் வழக்கில் உள்ளன.

அவற்றுள் அஸ்பிரின் முக்கியமானது. அஸ்பிரின் வில்லைகள் சாதாரணமாக காய்ச்சல், வலி ஆகியவற்றிற்கு மருந்தாக உபயோகிக்கப்படும். வைத்திய ஆய்வுகள் அஸ்பிரின் குறைந்த அளவில் உபயோகப்படும் இடத்தில் மாரடைப்பைத் தடுக்கலாம். என்கின்ற கருத்தை ஏற்படுத்தின 60-325 மி.கி என்னும் அளவுப்பிரகாரம் அஸ்பிரின் மாத்திரை உட்கொள்ள வேண்டும். அதிகளவில் உட்கொள்ளவதனால் மாரடைப்பைத் தவிர்க்கும் என்று கொள்வதற்கில்லை. எனினும் இவ் அளவுப்பிரமானம் சரியாக நிர்ணயிக்கப்படவில்லை.

அஸ்பிரின் குடற் புண்களை உருவாக்குவதனால் மிகவும் கவனமாக வைத்திய ஆலோசனைப்படி தேவை ஏற்படின் உபயோகிக்கவும். வைத்தியர்கள் அஞ்சையினா நோய் உள்ளவர்களுக்கு அஸ்பிரின் உண்ணுமாறு ஆலோசனை வழங்குவது மாரடைப்பைத் தடுப்பற்கே ஆகும்.

## முறைமையான தேகப்பயிற்சி செய்தல்.

கவனமாகவும், முறையாகவும் தேகப் பயிற்சி செய்வதனால் எமது உடலிலுள்ள மேலதிக தேவையற்ற பதார்த்தங்கள் வெளியேறுகின்றன. எனவே ஆரோக்கியமான வாழ்விற்கு சாலச் சிறந்ததாகும். முறையான தேகப்பயற்சியே உடல் நிலையைச் சீராகப்பேண உதவும். காற்றுள்ள நிலையில் செய்யப்படுகின்ற தேகப்பயிற்சி குருதியிலுள்ள கொழுப்பின் அளவைக் குறைக்கும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## உடல் நிறையைச் சீராகப் பேணுதல்.

உடல் நிறை அதிகரிக்குமாயின் பல்வேறு நோய்கள் ஏற்படும். எனவே உடல் நிறையைக் கட்டுப்படுத்திச் சீராக்குவது இன்னியமையாததாகும்.

## கொழுப்பு, கொலஸ்ரோல் உள்ள உணவு வகை

நவீன ஆய்வுகள் சச்சுரேட்ட கொழுப்பு, கொலஸ்ரோல் அதிகமான உணவுகள் முடியுரு நாடி சம்பந்தமான இதய நோய்கள் உருவாகுவதை தெளிவாகக் காட்டுகின்றன. எனவே கொழுப்புக் குறைவான உணவுகளை உண்பதால் இதய நோய்களைத் தடுக்கலாம்.

## மருத்துவ தன்மையுள்ள உணவுப் பதார்த்தங்கள்

காலாகாலமாக நம் முன்னோர்கள் பாவித்த சில பதார்த்தங்கள் இதய நோய்களைத் தடுக்கும் ஆற்றல் கொண்டவை. வெள்ளைப்பூண்டு, (உள்ளி), வெங்காயம் ஆகியவை மிகச்சிறந்த மருத்துவத்தன்மை உள்ள உணவுப் பதார்த்தங்கள் ஆகும் இவற்றை விட வேறு சில நாடுகளில் உபயோகப்படுகின்ற மூலிகைகளும் உணவு வகைகளும் இதய நோய்களுக்குச் சிறந்தவை. உதாரணமாக சீனத்து சிவப்பு மதுவம் தொற்றிய அரிசி, சோயாவிலிருந்து தயாரிக்கப்பட்ட டோபு, மிசோ ஆகிய பதார்த்தங்களைக் குறிப்பிடலாம்.

## பார்வை இழப்பதற்கான காரணங்கள்

*பிறப்பின் போது*

- பரம்பரை மூலம் ஏற்படும் நோய்கள்
- கருவில் விபரீத விளைவுகளை உருவாக்கக் காரணமானவை.

  வைரஸ் கிருமிகள்

  மருந்து வகைகள்

  பாதிப்புண்டாக்கும் கதிர்கள்

*பிறந்ததிலிருந்து – ஒரு மாதம் வரை*

- ஒஃப்தல்மியா நியொனடோரம் (ophtalima neonatorum) எனும் நோய்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

*வயது ஒரு மாதம் முதல் – 3 வருடங்கள் வரை*

- விட்டமின் A குறைபாடு
- புரதச்சத்து குறைபாடு
- எதிர்பாராத விபத்துக்கள்
- பிறப்பிலிலேயே க்லோகோமா (கண்களில் அழுத்தம் கூடுதல்) எனும் நோய் உண்டாதல்.

*மூன்று வயது முதல் பதினைந்து வயது வரை*

- எதிர்பாபராத விபத்துக்கள் - வீட்டில், பாடசாலையில்
- விழிவெண்படலத்தில் கட்டி போன்ற ஒன்று உண்டாகுதல்.

*பதினைந்து வயதிலிருந்து நாற்பது வயது வரை*

- தீடீர் விபத்துக்கள் - வீட்டில், தொழிற்சாலையில், போர்க்களத்தில்
- கண்ணின் பின்புறத்தில் குழி போன்ற பகுதியில் ஒவ்வாமையினால் (எதிர் விளைவுகள் ) ஏற்படும். "யுவியய்டீஸ்" எனும் நோய். (இது அதிகமாக இலங்கையின் வறண்ட பகுதிகளில் காணக்கூடியது )
- "ஸ்டிறொய்ட்" எனும் மருந்தை அதிகமாகப் பாவிப்பதால் கண்களின் அழுத்தம் அதிகமாகும்.
- ஸ்டிறொய்ட் க்லோகோமா பெண்களை விட இளம், அல்லது நடுத்தர வயதுடைய ஆண்களுக்கே அதிகமாக ஏற்படக் கூடிய நோயாகும்.

*நாற்பது வயதிலிருந்து ஐம்பத்தைந்து வயது வரை*

- விழித்திரையின் (ரெடினா) இரத்த நாளங்களில் மாற்றங்கள் ஏற்படுதல் (நீரிழிவு நோயும், அதிக இரத்த அழுத்தமும் இதற்கு முக்கியமான காரணமாகும்)
- மது அருந்துவதால் ஏற்படும் பார்வை இழப்பு.
- க்லோகோமா (கண்களில் அழுத்தம் அதிகரித்தல்)

*ஐம்பத்தைந்து வயதிலிருந்து எழுபத்தைந்து வயது வரை*

- கண்களில் வெண் படலம் உண்டாதல்.
- "கெரடமிடீஸ் எனும் நோய் ஏற்பட்டு கண்களில் சீழ் நிறைதல்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## நீரிழிவு நோயின் வகைகளும் அதன் அறிகுறிகளும்.

1997 ஆம் ஆண்டு அமெரிக்க நீரிழிவு சங்கத்தால் (American Diabetes Association) பின்வருமாறு நீரிழிவு நோயானது வகைப் படுத்தப்பட்டுள்ளது.

### A. நீரிழிவு வகை 01 (Type 01 Diabetes)

நீரிழிவு நோயாளிகளில் 5 -10 % தொகையினர் இந்த வகைக் குரியவர்கள். இது முன்பு இன்சுலின் சார்ந்த நீரிழிவு (Insulin Dependent Diabetes Melitus IDDM) எனவும் அழைக்கப்பட்டது. இந்நோயானது சதையச் சுரப்பியில் உள்ள இன்சுலினை உற்பத்தி செய்கின்ற கலங்கள் பாதிப்படைவதனால் ஏற்படுத்தப்படுகின்றது. இதனால் இங்கு இன்சுலினிற்கு முழுமையான பற்றாக்குறைஏற்படுகின்றது.

இந்நோயானது பெருமளவில் மரபணுக்கள் சாரந்ததாக இருப்பினும் சில பிற காரணிகளும் இதில் செல்வாக்குச் செலுத்துகின்றன. அவற்றுள் வைரஸ், குழந்தைப் பராயத்தில் மிக ஆரம்பத்திலேயே பசுப்பால் கொடுத்தல், புகையூட்டப்பட்ட உணவு வகைகளை உட்கொள்ளல் போன்றவை சில காரணிகளாகும்.

இந்நோயானது பெருமளவில் இளவயதினரையே தாக்குகின்றது. பெரும்பாலும் 30 வயதிற்கு கீழ்ப்பட்டோரே அதிகமாக பாதிக்கப்படுகின்றனர். அதி உச்சமான இந் நோயின் வெளிப்பாடு 11-13 வயதினரிடையே காணப்படுகின்றது.

இந்நோயின் அறிகுறிகள்

1) அதிகதாகம்
2) அடிக்கடி சிறுநீர் கழித்தல்
3) இரவில் அடிக்கடி சிறுநீர் கழித்தல்
4) உடல் நிறை குறைதல்
5) உடற்களைப்பு
6) தசைகளில் பிடிப்பு ஏற்படல்
7)கண்பார்வை குறைதல்
8) பங்கசு / பக்றீரியா கிருமித்தாக்கம்

### B. நீரிழிவு வகை 02 (Type 02 Diabetes)

நீரிழிவு நோய்களில் 85% இற்கு மேற்பட்டவர்கள் இந்த வகைக்குரியவர்கள். இது முன்பு இன்சுலின் சாராத நீரிழிவு எனவும் (Insulin Dependent Diabetes Mellitus -NIDDM) அழைக்கப்பட்டது. இந்நோயானது ஒப்பீட்டளவில் இன்சுலின் அளவு குறைவதாலும் இன்சுலின் தொழிற்பாட்டுத்திறன் குறைவடைவதாலும் ஏற்படுகின்றது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இந்நோயும் பெருமளவில் மரபணுக்கள் சார்ந்ததாக இருப்பினும் சில பிறகாரணிகளும் இதில் செல்வாக்குச் செலுத்துகின்றது.

அவற்றுள்

**அ) பிறப்பு நிறை குறைவாக இருத்தல்**

குழந்தை பிறக்கும் போது அதன் நிறை குறைவாக இருப்பின் அக்குழந்தை பெரும்பாலும் கர்ப்பத்தில் போசாக்குக் குறைபாட்டை எதிர்கொண்டிருக்கும். இதன் போது இன்சுலினை உற்பத்தி செய்யும் கலங்களின் உற்பத்தி பாதிப்படைந்திருக்கலாம். இதனால் இக்குழந்தை பிற்காலத்தில் நீரிழிவு நோயாளியாவதற்குரிய வாய்ப்பு அதிக மாகின்றது.

**ஆ) வளர்ந்தோர்களில் மிகையான பருமன்**

உடற்பருமன் கூடியவர்களின் சுற்றயல் இழையங்களில் இன்சுலின் தொழிற்படும் தன்மை குறைவடை கின்றது.

இந்த வகைக்குரிய நீரிழிவு நோயிற்கு பெருமளவில் வயதானவர்களே (30 வயதிற்கூடியவர்கள்) இலக்காகின்றனர்.

இவ்வகையின் நோயின் அறிகுறிகளாவன,

1) அதிகதாகம்
2) அடிக்கடி சிறுநீர் கழித்தல்
3) இரவில் அடிக்கடி சிறுநீர் கழித்தல்
4) உடல் நிறை குறைதல்
5)கண்பார்வை குறைதல்
6) உடல் அடிக்கடி களைப்படைதல்

கிருமித் தொற்றினால்

7) மீண்டும் மீண்டும் பங்கசு கிருமித் தாக்கத்திற்கு உட்படுதல்
உதாரணமாக இனப்பெருக்க உறுப்புகளில் ஏற்படும் "கண்டிடா" (Gential Candidiasis) வகை கிருமித்தாக்கம்
8) மீண்டும் மீண்டும் பக்றீரியா (Bacteria) கிருமித் தாக்கத்திற்கு உட்படுதல் (Urinary tract infection)

பெரிய குருதிக்குழாய்களில் இந்நோயின் தாக்கத்தால்

9) இதயத்திற்கு குருதி வழங்கல் குறைவதால் இதயக்கலங்கள் இறப்பதால் ஏற்படும் பிரச்சனை (Acute Myocardial infarction)
10) மூளைக்கு குருதி வழங்கும் குழாய்களால் ஏற்படும் பிரச்சனைகள்
    அ) தற்காலிகமாக மூளைக்குக் குருதி கிடைக்காமையால் ஏற்படும் பிரச்சனை (Transient Ischemic attack)
    ஆ) பாரிசவாதம் (Stroke)
11) சுற்றயல் குருதி வழங்கும் குழாய்களில் ஏற்படும் பிரச்சனை இதனால் கால்விறைப்பு, நீண்டகால ஆறாத புண் என்பன ஏற்படலாம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நுண்குருதிக் குழாய்களில் இந்நோயின் தாக்கத்தால்

12) கண்ணில் :
பார்வைக் குறைபாடு

13) சிறுநீரகத்தில்
அ) சிறுநீருடன் நுண்ணிய அளவில் புரதம் (Micro albuminuria) வெளியேறுதல்
ஆ) உயர் இரத்த அமுக்கம் ஏற்படல். (Hypertension)
இ) நெப்ரோட்டிக் சின்ரோம் (Nephortic Siynderome)

14) நரம்புகளில்:
அ) இதில் பல பிரச்சனைகள் ஏற்படுகின்றன. கால்களில் ஆறாத நீண்ட நாள் காயங்கள் ஏற்படுதல். இதன் பாதிப்புகளில் ஒன்றாகும்.

C) வேறு குறிப்பிட்ட வகை நீரிழிவு

புதிதாக நீரிழிவு நோய் கண்டுபிடிக்கப்படுபவர்களில் 1-2% இனர் இவ்வகைக்குரியதாக உள்ளனர். இந்நோயானது இன்சுலினை உற்பத்தி செய்யும் சதையச் சுரப்பியில் ஏற்படும் பிரச்சனைகளினாலோ, சில மருந்துகளினாலோ அல்லது சில கிருமித்தொற்றால் போன்றவற்றினாலோ ஏற்படுகின்றது.

D. கர்ப்பவதியில் ஏற்படும் நீரிழிவு நோய்

கர்ப்ப காலத்தில் கண்டுபிடிக்கப்படும் நீரிழிவு நோயானது இவ்வகையினைச் சார்ந்ததாகும். இது கர்ப்ப காலத்தில் உருவாகிய நோயாகவோ அல்லது ஏற்கனவே இருந்த நீரிழிவு நோய் கர்ப்ப காலத்தில் கண்டுபிடிக்கப்பட்டதாகவோ இருக்கலாம்.

இந்நோயினை

1. உடற் பருமனான கர்ப்பிணித்தாய்
2. வயதான கர்ப்பிணித்தாய்
3. பரம்பரையில் நீரிழிவு நோயினைக் கொண்ட கர்ப்பிணித்தாய்
4. முன்னைய குழந்தை இறந்து பிறந்த அல்லது பெரிய குழந்தையைப் பெற்ற கர்ப்பிணித்தாய்
5. திருப்தியற்ற முன்னைய மகப்பேறு தொடர்பிலான வரலாற்றைக் கொண்ட கர்ப்பிணித்தாய்

போன்றவர்களில் எதிர்பார்க்கமுடியும். ஆகவே இந்த வகையில் அடங்குவோர் குழந்தை தங்கி ஆறாவது மாதமளவில் நீரிழிவு நோய்க்குரிய பரிசோதனைகளை மேற்கொள்வதனூடாக வேண்டத்தகாத பிரச்சனை களைக் குறைத்துக் கொள்ளலாம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பாரிசவாத (Stroke) நோயாளிகளுக்கான அறிவுறுத்தல்கள்

01. தோலில் அண்டும் பகுதிகளில் ஏற்படும் புண்களும் (Bed sores) அதை தவிர்க்கும் முறையும்.
இவர்களே ஒரே இடத்தில் படுப்பதால் இது ஏற்படுகின்றது. இதை தவிர்ப்பதற்கு
1. நோயாளியை இரண்டு மணித்தியாலங்களிற்கு ஒரு முறை திருப்பிவிடல் வேண்டும்.
2. நோயாளியின் பின்புறத்தை அடிக்கடி சோதித்தல் வேண்டும்.
3. படுக்கை விரிப்புக்கள் முதலியவற்றை தூய்மை பேணல் வேண்டும்.
4. விசேட மெத்தைகளை பயன்படுத்தலாம் (Dribble Mattress) (விலை அதிகம்)

02. வாயை சுத்தமாக வைத்திருக்கும் முறை (Mouth care)
1. ஒரு நாளில் ஆகக்குறைந்து இரு முறையாவது வாயை கழுவுதல் வேண்டும்.
2. வாயில் ஏதாவது சுரப்புகள் (Secretions) காணப்படின் அதை ஒரு Rubber tube, Syring உதவியிடன்உறிஞ்சி (Suck) எடுத்தல் வேண்டும்.
(Bed side sucker விலை அதிகம்)

03. கண் பராமரிக்கும் முறை
1. கண்ணை சுத்தமாக வைத்திருத்தல்.
2. கண்ணினுள் புண்கள் வருதலை தடுத்தல்.

04. சலம் வெளியேறுதலை பேணுதல் (Bladder Care)
அநேகமான இந்நோயாளிகளால் சலம் தன்னை அறியாமலே (Urinary incontience) வெளியேறுவதால்
1. Urinary catheter பயன்படுத்தலாம்.
2. catheter 2-4 கிழமைகளிற்கு ஒரு முறை மாற்றல் வேண்டும். அல்லாவிடில் சலத்தில் கிருமிகள் தொற்றிவிடும்.
3. சலத்தை இடைக்கிடை பரிசோதித்து தொற்று இருப்பின் சிகிச்சை அளித்தல் வேண்டும்.

05. மலம் வெளியேறுதலை பேணல் (Bowel Care)
1. மலம் தன்னை அறியாமல் (Fecal incontinence) வெளியேறின் உடனுக் குடன் துப்பரவு செய்தல் வேண்டும்.
2. வசதி இருப்பின் Pampers பயன்படுத்தலாம்.
3. மலச்சிக்கலை தவிர்ப்பதற்கு அதிக நார்ச்சத்துள்ள உணவு வகைகளை கொடுக்க வேண்டும். முக்கியமாக அதிக மரக்கறி பழவகைகளை நசித்து (Mash) ஊட்ட வேண்டும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

4. மலச்சிக்கல் இருப்பின் பேதி மருந்து (Purgatives) வாய் வழி ஊடாக (Oral) எடுக்கலாம். அதற்கு பயனளிக்கா விடின் மலம் செல்லும் துவாரத்தின் ஊடாக (Sypposition) அனுப்பலாம்.

5. அதற்குப் பயனளிக்காவிடின் Enema/ கையினால் மலத்தை காலி செய்ய முடியும். (Manual evacuation)

06. கிரமமாக உடற்பயிற்சி செய்தல் வேண்டும். (Regular Phuuotherapy) இல்லா விடின் இந்நோயாளிக்கு பாரதூரமான சுருக்கங்கள் (Contractures) / அங்கவீனங்கள் (Depormities) ஏற்பட்டு எதிர்காலத்தில் அங்கங்களை பயன்படுத்த முடியாமல் போய்விடும்.

இதை ஒரு பயிற்றப்பட்ட உடற்பயிற்சியாளரின் (Physdiotherapiest) அறிவுறுத்தலின்படி ஒரு நாளைக்கு ஆகக்குறைந்தது 2 முறை ஆவது செய்தல் வேண்டும்.

தேவை ஏற்படின் ஊன்றுகோல் (Walking Stick), Walker,Quadrate போன்றவற்றை பயன்படுத்தலாம்.

07. உணவு உட்கொள்ளல் (Food intake)

1. Gag reflex சரியாக இல்லாமல் இருப்பின் tube ஊடாக அந்த நோயாளியின் உணவுகளை பல தரப்பட்ட நீராகாரங்கள் ஆக ஒரு நாளைக்கு 2000CC கொடுக்க வேண்டும் (மென்பானம், தேநீர், கோப்பி, பால், பழரசங்கள், Malted Milk)

2. வர்த்தக முறையாக தயாரிக்கப்பட்ட (Commercial preparation) உணவு வகைகளை கொடுக்கலாம். Eg :Isocal.

3. உணவை கொஞ்சம், கொஞ்சமாக செலுத்தவேண்டும். அதிக உணவு வகைகள் செலுத்தின் அது சுவாச குழாயினுள் சென்று (Aspiration) உயிருக்கு ஆபத்து ஏற்பட்டுவிடும்.

08. இந் நோயாளிக்கு குருதி அமுக்கம் கூட (Hyper tension) சலரோகம் (Diabetes), மாரடைப்பு (Myocardral infarction / Ischemic heart disease), குருதியில் அதிக Cholestrem யை காணப்படின் உயிராபத்து ஏற்படலாம். அதற்கு தகுந்த சிகிச்சை அளிக்க வேண்டும்.

09. புகைபிடிக்கும் பழக்கம் (Smoking),மது பழக்கம் (Alcohol intake) முற்றாக தவிர்க்கப்பட வேண்டும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சத்தின் அளவு

| உணவு வகைகள் | புரதம் (g) | கொழுப்பு (g) | மாப்பொருள் (g) | சக்தி (kcal) | நார்ப்பொருள் (g) | கல்சியம் (mg) | பொஸ்பரஸ் (mg) | இரும்பு (mg) |
|---|---|---|---|---|---|---|---|---|
| புழுங்கலரிசி (கைக்குத்து) | 8.5 | 0.6 | 77.4 | 349 | - | 10 | 280 | 2.8 |
| புழுங்கலரிசி (மில்லில் அரைத்தது) | 6.4 | 0.4 | 79.0 | 346 | 0.2 | 9 | 143 | 1.0 |
| பச்சையரிசி | 6.8 | 0.5 | 78.2 | 345 | 0.2 | 10 | 160 | 0.7 |
| தவிடு (அரிசி) | 13.5 | 16.2 | 48.4 | 393 | 4.3 | 67 | 1410 | 35.0 |
| கோதுமை மா. | 11.0 | 0.9 | 73.9 | 348 | 0.3 | 23 | 121 | 2.7 |
| பாண் | 7.8 | 0.7 | 51.9 | 245 | 0.2 | 11 | - | 1.1 |
| உழுந்து | 24.0 | 1.4 | 59.6 | 347 | 0.9 | 1.54 | 385 | 3.8 |
| கௌபி | 24.1 | 1.0 | 54.5 | 323 | 3.8 | 77 | 414 | 8.6 |
| பயறு | 24.0 | 1.3 | 56.7 | 334 | 4.1 | 124 | 326 | 4.4 |
| கடலை | 17.1 | 5.3 | 60.9 | 360 | 3.9 | 202 | 312 | 4.6 |
| துவரம் பருப்பு | 22.3 | 1.7 | 57.6 | 335 | 1.5 | 73 | 304 | 2.7 |
| சோயா அவரை | 43.2 | 19.5 | 20.9 | 432 | 3.7 | 240 | 690 | 10.4 |
| பீற்றூட் | 1.7 | 0.1 | 8.8 | 43 | 0.9 | 18.3 | 55 | 1.19 |
| கரட் | 0.9 | 0.2 | 10.6 | 48 | 1.2 | 80 | 530 | 1.03 |
| உருளைக்கிழங்கு | 1.6 | 0.1 | 22.6 | 97 | 0.4 | 10 | 40 | 0.48 |
| வெங்காயம் (சிறியது) | 1.8 | 0.1 | 12.6 | 59 | 0.6 | 40 | 60 | 1.2 |
| மரவள்ளிக்கிழங்கு | 0.7 | 0.2 | 38.1 | 157 | 0.6 | 50 | 40 | 0.9 |
| பாகற்காய் | 1.6 | 0.2 | 4.2 | 25 | 0.8 | 20 | 70 | 0.61 |
| கத்தரிக்காய் | 1.4 | 0.3 | 4.0 | 24 | 1.3 | 18 | 47 | 0.38 |
| முருங்கைக் காய் | 2.5 | 0.1 | 3.7 | 26 | 4.8 | 30 | 110 | 0.18 |
| வெண்டிக்காய் | 1.9 | 0.2 | 6.4 | 35 | 1.2 | 66 | 56 | 0.35 |
| பூசனிக்காய் | 1.4 | 0.1 | 4.6 | 25 | 0.7 | 10 | 30 | 0.44 |
| புடலங்காய் | 0.5 | 0.3 | 3.3 | 18 | 0.8 | 26 | 20 | 1.51 |
| தக்காளி | 0.9 | 0.2 | 3.6 | 20 | 0.8 | 48 | 20 | 0.64 |
| தேங்காய்ப் பால் | 3.4 | 41.0 | 11.9 | 430 | - | 15 | 140 | 1.6 |
| முட்டை | 13.3 | 13.3 | - | 173 | - | 60 | 220 | 2.1 |
| பால் (பசு) | 3.2 | 4.1 | 4.4 | 67 | - | 120 | 90 | 0.2 |
| மோர் | 0.8 | 1.1 | 0.5 | 15 | - | 30 | 30 | 0.1 |
| ஆட்டிறைச்சி | 21.4 | 3.6 | - | 118 | - | 12 | 193 | - |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தைப்பொங்கல்

சூரியன் எமது கண் கண்ட தெய்வமாகும். மழை தந்நது, வெய்யில் தந்தது, பயிர் வளர்வது, நாங்கள் வாழ்வது சூரியபகவானது மாபெரும் கருணையினால் அன்றோ? உலகையே இயக்கும் அந்தக் கதிரவனது அருள் ஆட்சியில் அதிக விளைச்சலைப் பெற்றவர்களான உழவர்களின் மகிழ்ச்சியின் வெளிப்பாடே நன்றி செலுத்தும் தைப்பொங்கல் பண்டிகையாகும். உழவருக்கு உறு துணையாக பல்வேறு வகையிலும் பயன்பட்ட எருது, நிறையுணவாம் பாலும் பிறவும் தந்த பசு ஆகியவற்றுக்கு மதிப்பளிக்கும் மறுநாள் பண்டிகையான பட்டிப் பொங்கலும் தமிழரின் நன்றியுணர்வை உலகுக்கு முன்னிலைப்படுத்துவதாக உள்ளது.

மார்கழி மாதத்தின் இறுதி நாளன்று அதாவது தைப்பொங்கலுக்கு முதல் நாள் எமது வீடு மற்றும் வளவுச் சுற்றாடலில் காணப்படும் பாவனைக் உதவாதவற்றைக் களைந்து, வதிவிடத்தையும், சூழலையும் தூய்மையாக்கி சுகாதாரம் பேணினார்கள் நம்முன்னோர்கள். இதனையே போகிப்பண்டிகை என்பர்.

நாம் தமிழ் - சிங்கள புதுவருடம் எனக் கூறுவது ஆரிய வருடப் பிறப்பையேயாகும். உண்மையில் தமிழர்களது புதுவருடப் பிறப்பென்பது உழவர் திருநாளம் தைப்பொங்கல் அன்றுதான். தமிழர்களின் புதுவருடப் பிறப்பன்று தைப்பொங்கல் பண்டிகை கொண்டாப்படுவது புதுவருடப் பிறப்பை பொங்கலிட்டு வரவேற்குமொரு மங்கலமான செயற்பாடாகவும் உள்ளது. தமிழ் வருடம் என்பது திருவள்ளுவர் ஆண்டையே குறிப்பிடுவதாகும். இந்த ஆண்டின் முதல் வரும் மாதம் சுறவம் எனப்படுகிறது. சுறவம் மாதத்தின் முதலாவது நாளிலேயே தைப்பொங்கலை நாம் கொண்டாடுகின்றோம்.

திருவள்ளுவர் ஆண்டில் சுறவம், கும்பம், மீனம், மேழம், விடை, ஆடவை, கடகம், மடங்கல், கன்னி, துலை, நளி, சிலை எனப் பன்னிரு மாதங்கள் உள்ளன. தமிழ் நாள்களாக ஞாயிறு, திங்கள், செவ்வாய்,புதன், வியாழன், வெள்ளி, சனி ஆகியனவே உள்ளன. திருவள்ளுவர் ஆண்டு எனப்படுவது ஆங்கில வருடத்தை விடவும் 31 ஆண்டுகள் முன்னதாக அமைகின்றது. சூரியனது சுழற்சியை இரண்டாகப் பிரித்து அதனடிப்படையில் மாதங்களை வகுத்தனர். ஆரம்ப கால மனிதர். இயற்கையை வழிபட்ட காலத்திலேயே தமிழர்கள் நிலம், நீர், நெருப்பு,காற்று, ஆகாயம் என்பனவற்றைப் பஞ்ச பூதங்கள் எனக் கொண்டு வழிபட்டனர். சூரியனை முதன்மைப்படுத்தி வழிபாடுகள் மேற்கொண்டதற்கு சான்றாக சூரியனார் கோயில்கள் பல இந்தியாவிலுள்ளதுடன், பஞ்ச பூதங்களையும் மூலவராகக் கொண்ட பிரசித்தி பெற்ற கோயில்களும் உள்ளன.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அன்றாடக் கிரியைகளில் சில நடைமுறைகள்

**மாவிலை**

இது முக்கியமாக மங்களப் பொருளாகவும், தோரணமாகவும் கட்டப்படுகிறது. ஆலயங்கள் மற்றும் விழாக்கள், இல்லங்கள், திருமண வைபவங்களிலும் இம்மங்களப் பொருள் பயன்படுத்தப்படும். சகல வைபவங்களுக்கும் கும்பம் வைக்கும் பொழுது மாவிலை சடையாகப் பாவிக்கப்படுகின்றது. மாவிலை தோரணம் அமைக்கும் போது மூன்று முறையாகப் பயன்படுத்தப்படும்.

*1. நற்காரியங்கள்*

ஆலங்களில் நடைபெறும் உற்சவம் விழாக்களிலும், திருமண மண்டபங்களிலும், வீடுகளில் சுபகாரியங்கள் நடைபெறும் போதும் மாவிலைத் தோரணம் இலையின் காம்பு நுனியை முற்புறமாக வளைத்து இலையின் முன்பகுதியில் காம்பைக் குத்தித் தொங்க விடுதல் வேண்டும். இது மாவிலை தலை குனிந்து வரவேற்கும் பாணியில் இருக்க வேண்டும். (5அல்லது 7 இலைகளைக் குத்தலாம்) இது சுபகாரியத்திற்குரிய அறிகுறியைக் காட்டும் தகைமையாகும்.

*2. கும்பம் வைக்கும் போது*

தேங்காயின் கீழ் மாவிலையை அமைத்தல் வேண்டும். இதில் ஐந்து அல்லது ஏழுஅல்லது ஒன்பது இலைகளை அமைத்தல் சிறப்பாகும்.

*3. அபரக் கிரியைகளின் போது*

இது வீட்டில் மரணங் சடங்கு நிகழும் போது அமைக்கப்பட வேண்டிய முறையாகும். மாவிலையின் காம்பு நுனியை பின் பக்கமா மடித்துக் குத்தி தொங்கவிடல் முறையாகும். இது அபரக் கிரியை முறைக்கு மட்டும் உரியதாகும்.

*வாழை மரம்*

இது ஆலயங்களிலும், விழாக்களிலும், வீடுகளில் திருமண வைபவங்களுக்கும் மற்றும் சுபகாரியங்களுக்கும் கட்டுதல் வேண்டும். இதன் நோக்கம் வாழையின் பெறுமதி மனிதனுக்குப் பெரும் பயனைத் தரவல்லது. இதன் இலையில் உணவு அருந்துதல் இதன் தண்டு, காய், பழம், பூ கனி என்பவை உணவாகவும், நார் பூ கட்டுவதற்கும் பயன்படுகின்றது. இதன்பயன் எப்படியோ அதேபோல் எல்லோரிடமும் இப்படியான பயனைப் பெறக்கூடிய நிலை வரவேண்டும். இதனை அழிக்கமுடியாது. இது வாழையடி வாழையாக வாழ வேண்டும் என்பதை எடுத்துக்காட்டும் முகமாக வாழைமரம் கட்டப்படுகின்றது. வாழைமரம் பழுத்த பழமாக மஞ்சள் கனியாக மங்களமாக அமைந்தால் அது மிகவும் சிறப்பாக அமையும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மரணச் சடங்குகளில் வாழைமரம் கட்டுதல், சாம்பல் வாழைக்காய் மரத்துடன் கட்டுவது அன்றாட மரபாக அமைகிறது. இதன் பயன் துக்கத்தைத் தெரிவிப்பதன் பயனாக எடுத்துக் காட்டாக அமைகிறது. வாழைமரம் இலையில் பயன்படுத்தும் முறை, கும்பம் வைக்கும் போது தலை நுனிப்பக்கம் எப்பொழுதும் கிழக்குத் திசை அல்லது வடக்குத் திசையாக அமைத்து கும்பம் வைக்க வேண்டும். இது மட்டுமல்ல சாப்பிடும் போது தலை நுனி. இடக்கைப் பக்கமாக இருத்தல் வேண்டும் .எனினும் அபரக் கிரியைகளுக்கு வாழை இலையின் தலைநுனி தெற்குப் பக்கமாக போடுதல் வேண்டும்.

*தென்னந்தோரணம்*

இது தென்னங்குருத்து தோரணத்தின் நுனி கீழ்ப்பக்கமாக சுபகாரியங்களுக்கு அமைய வேண்டும்.

அபரக் கிரியைகளுக்கு மேற் பக்கமாக அமைய வேண்டும். தோரணத்தை வெட்டும் போது கவனமாக இருத்தல் வேண்டும்.

## கோவிற்பற்றுகள்

இது போர்த்துக்கேயர் யாழ் குடா நாட்டையும், தீவுப் பகுதிகளையும் 32 கோவில் பற்றுக்களாகப் பிரித்தனர்.

வலிகாமம் (14) - நல்லூர், சுண்டுக்குளி, சங்கானை, வண்ணார்பண்ணை, மானிப்பாய், பண்டத்தரிப்பு, வட்டுக்கோட்டை, உடுவில், மல்லாகம், தெல்லிப்பளை, மயிலிட்டி, அச்சுவேலி, புத்தூர், கோப்பாய்.

வடமராட்சி (03) - உடுப்பிட்டி, கட்டை வேலி, பருத்தித்துறை

தென்மராட்சி (05) - நாவற்குளி, சாகச்சேரி, கச்சாய், வரணி, எழுதுமட்டுவாழ்

பச்சிளம்பள்ளி (04) - முகமாலை, புலோப்பளை, தம்பகாமம், முள்ளிப்பற்று.

தீவுப்பகுதி (06) - காரைதீவு (காரைநகர்), ஊர்காவற்றுறை, வேலணை, அல்லைப்பிட்டி, புங்குடுதீவு, நயினாதீவு.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஒருவருடைய துடக்கு அவர் சார்ந்த யார் யாருக்கு வரும்?

ஓர் ஆண் மகனுக்கு அவனுடைய பிதா (தந்தை), பிதாமகன் (தந்தையின் தந்தை), ப்ரபிதாமகன் (தந்தையின் தாத்தா), விருத்தப் பிதா (தந்தையின் தாத்தாவின் தந்தை), ப்ரவிருத்தப் பிதாமகன் (தந்தையின் தாத்தாவின் தாத்தா), அதிப்ரவிருத்தப் பிதாமகன் (அவரின் தந்தை) என்னும் அறுவரும், அவ்வறுவருடைய புத்திரர் (மகன்), பௌத்திரர் (மகனின் மகன்), ப்ரபௌத்திரன் (ப்பௌத்திரனின் மகன்), ப்ருத்தப் ப்ரபௌத்திரர் (பௌத்திரனின் பௌத்திரன்), ப்ரவிருத்தப் ப்ரபௌத்திரர் ( பூட்டனின் பேரன்) ஆகிய அறுவரும் அவர்களுடைய புத்திரர்களும், தானும் ஆகிய ஏழு தலைமுறையினர் ஆசௌச உரிமையாளர் ஆவர். இவர்கள் சபிண்டர் எனவும், ஞாதிகள் எனவும் அழைக்கப்படுவர். சுற்றத்தவர் என இங்கே அவர்கள் சுட்டப்பகின்றனர்.

## ஆசௌசம் எத்தனை நாள் கணிப்பது எப்படி?

பூரண ஆசௌசம் என்பது அந்தணருக்கு 10 நாள், ஏனையோருக்கு 30 நாள் எனும் போது மூன்று மடங்காக அமைவது போலவே அதற்குக் குறைந்த நாட்கணக்குகள் கூறப்படும் போதும் அந்தணர்க்குரிய நாளில் மூன்று மடங்காக ஏனையோருக்கும் கொள்ள வேண்டும்.

## ஆசௌசம் எ வ்வகைகளில் ஏற்படலாம்?

ஆசௌசம் 10 வகையாக ஏற்படலாம் என நூல்கள் விதிக்கின்றன.

பிறத்தல், இறத்தல், சுடுதல், பிரேதத்தின் பின் செல்லல், சுமத்தல், அழுதல், ஆசௌசியின் அன்னம் புசித்தல், ஆசௌசிகளுடன் கலத்தல், வபனம் (முகச்சவரம்) செய்யாமை, சபீண்டிகரணம் முதலியன செய்யாமை என்பவையே அவை.

பிறப்புத் தீட்டிலும் இறப்புத் தீட்டுஇரு மடங்கு வலிமை யுடையது. பூப்படைதல் அதைவிட இருமடங்கு. மரணத்தினால் ஏற்படும் தீட்டைவிட இறந்தவரைத் தானம் செய்வதால் ஏற்படும் தீட்டு இருமடங்கு வலிமையுடையது எனக் காமிகம் கூறுகிறது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## எங்கள் சின்னம்மா

இப்பூவுலகில் 86 வருடங்கள் வாழ்ந்து இப்படித்தான் வாழவேண்டும் என வாழ்ந்து காட்டி, எல்லோரினது அன்னைப்பெற்று எம் உயிரில் கலந்த உறவாகிய எமது சின்னம்மா செல்வரத்தினம் வேலாயுதம்பிள்ளை அவர்களின் பிரிவு எம் இதயத்தின் தாக்கத்தை ஏற்படுத்தியிருப்பது இரத்தபாசம் பிணைப்பாகும்.

இவர் தனது தந்தையாரைப் போல சிறுவயது முதல் கல்வியில் மட்டுமல்லாது, கலை ஞானம் மிக்கவராகவும் விளங்கினார். சங்கீத இசையில் வல்லவராயும், ஆர்மோனிய இசைக் கருவி வாசிப்பதில் விற்பனராகவும் திகழ்ந்தார். இவரது மூத்த மகனும் இவர் வழியில் நாடக நடிகராகவும், நாடக எழுத்தாளராகவும், நாடக நெறியாளராகவும விளங்கி பல சரித்திர, சமூக நகைச்சுவை நாடகங்களை மேடையேற்றி வெளியீடு செய்தமை குறிப்பிடத்தக்கது.

பெற்றோர் விருப்பப்படி எங்கள் சின்னம்மா அவர்கள் சின்னையாவாகிய கிருஷ்ணர் வேலாயுதம்பிள்ளை அவர்களை திருமணம் செய்து இல்லற வாழ்வில் இனிதே வாழ்ந்து தன் பிள்ளைகளையும், பெறமக்களையும், அன்புடனும், பாசத்துடனும் வளர்த்து மேன்மையுறச் செய்த பாக்கியவதியாவர். காலையும், மாலையும் கடவுளை வணங்கும் பண்புடையவராய் தன் பிள்ளைகளையும் இறை பக்தியில் இணைந்த பெருமைக்குரியவர். சின்னம்மா அவர்களின் பரந்த, உயர்ந்த பணிகளுக்கு மிக்க உறுதுணையாக இருந்து நல்வழி காட்டிய எங்கள் சின்னையா வேலாயுதம்பிள்ளை அவர்கள் சின்னம்மாவின் கண்கண்ட தெய்வமாக விளங்கினார்.

எமது குலதெய்வம் கற்பகப்பிள்ளையாரின் மீளா அடியவர்களாகிய சின்னம்மா குடும்பத்தினர் ஆலய வழிபாட்டிலும், ஆலய சரியைத் தொண்டுகளிலும் தம்மை முழுமையாக ஈடுபடுத்தி வந்தனர். கற்பகன் திருவருளால் 1980 இல் கற்பகப்பிள்ளையார் ஆலய முதலாம் திருவிழா உபயகாரர் ஆகும் பேறு கிடைத்தது. 1998 வரை பக்தி பூர்வமாக அலங்கார உற்வசவத்தின் ஆரம்பத் திருவிழாவை சிறப்பாக நடாத்தி உற்சவத்தை ஆரம்பித்து வைத்தனர்.

இவ்விழாவிற்கென சிறப்பான கராம்பசு வாகனத்தையும் ஆலயதத்திற்கு வழங்கியமை குறிப்பிடத்தக்கது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



கற்பகப்பிள்ளையார் ஆலய கொடியேற்ற திருவிழாவின் போது
மக்கள் மருமக்கள் பேரப்பிள்ளைகளுடன் சீமாட்டி.



கற்பகச்சோலை நன்மைவிருத்திச் சங்க மின் இணைப்பை வழங்கிய சீமாட்டி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

1999 இல் ஆலயத்தில் மகோற்சவம் நடைபெறக் கூடிய வகையில் யாகசாலை, கொடிமரம், தம்பப்பிள்ளையார் அமையப் பெற 04.07.1999 இல் மகா கும்பாபிஷேகப் பெருவிழா நடைபெற்றது. கற்பகன் திருவருளால் 05.09.1999 இல் எம் ஆலயத்தின் முதலாவது கொடியேத்திருவிழாவை நடாத்தும் பாக்கியம் பெற்ற எமது சின்னம்மா குடும்பத்தினர் தொடர்ந்து கொடியேற்றத்திரு விழாவினை சிறப்பாக நடாத்தி வருகின்றனர்.

எம் சின்னம்மா அவர்களது துணைவர் கி.வேலாயுதம்பிள்ளை அவர்களினது மறைவின் பின்னர் அவரது ஞாபகார்த்தமாக எமது கிராமத்தின் தரம் 5 புலமைப்பரிசில் பரீட்சையில் சித்தி பெறும் மாணவர்க்கான கல்வி ஊக்குவிப்பு நிதியை ஆலய திருவிழாவின் போது வருடாவருடம் வழங்கி வருவதும், எமது கிராம பாடசாலை பரிசளிப்பு விழாவிற்கு வருடாவருடம் நிதி வழங்கி வருவதும் இவரின் சிறப்பான பண்பாகும். இக்கல்வி ஊக்குவிப்புப் பணியை அவரது பிள்ளைகள் தொடர ஏறற் வழி வகைகளை சின்னம்மா ஒழுக்கத்தன்மை போற்றுதற்குரியது.

சுவையான உண்டியுடன், அன்பையும், பாசத்தையும் ஊட்டி நல்உறவு தந்த எம் சின்னம்மாவின் ஆத்மா சாந்தி பெற கற்பகப்பிள்ளையாரைப் பிரார்த்திக்கின்றேன்.

ஓம் சாந்தி! சாந்தி! சாந்தி!

**பிரம்மனாச்சி தோட்டம்,**
**கற்பகப்பிள்ளையார் தேவஸ்தானம்,**
**வீட்டு – வடக்கு.**

**பெறாமகன் பு.ஸ்ரீகாந்தன்.**
**(தேவஸ்தான முதல்வர்)**

**பஞ்ச பூதக்கோவில்கள்**

| | | |
|---|---|---|
| பிருதிவி (மண்) | - | திருவாரூர். |
| அப்பு (நீர்) | - | திருவானைக்கா |
| தேயு (தீ) | - | திருவண்ணாமலை |
| வாயு (காற்று) | - | திருக்காளத்தி |
| ஆகாயம் (வெளி) | - | சிதம்பரம் |


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வலிமேற்குப் பிரதேச சபைத் தவிசாளரின் இரங்கற் செய்தி ....

தக்கார் தகவிலர் என்பது அவரவர் எச்சத்தால் அறியப்படும் என்ற பொய்யாமொழிப் புலவரின் வாக்கிற்கு இணங்க எமக்கு அளப்பெரிய ஆற்றல் மிகு சேவை மனப்பாங்கு மிக அதிகம் கொண்ட நன் மக்கள் பேற்றினை இம் மண்ணுக்கு அற்பணித்து இன்று இறைபதம் அடைந்த என்றும் எம் நினைவில் வாழ்ந்து வரும் அமரர் திருமதி வேலாயுதம்பிள்ளை செல்வரத்தினம் (சீமாட்டி). அவர்களை குறிப்பிட முடியும். நான் அறிந்த வகையில் குறித்த கற்பகச்சோலைக் கிராமத்தில் சகலரது அன்பையும் பெற்று சீமாட்டி என அழைக்கப்பட்டு என்றும் ஊரவரால் புகழப்பட்ட அம்மையாரின் இழப்பு என்பது காலத்தினால் ஈடு செய்ய முடியாத ஒன்றாகவே உள்ளது. ஒரு தாயாக நல் வழிகாட்டியாக பத்து பிள்ளைகளை பெற்றெடுத்து அவர்கட்கு அன்பால் அமுதூட்டி அறிவால் பல வளம் பெருக்கி நல் நிலை அடைய வைத்து தன் பிள்ளைகளை ஊர் போற்ற உயரவைத்த தாய் அவர்களது செயல் அமரர் திருமதி. வேலாயுதம்பிள்ளை செல்வரத்தினம் அவர்கள் வள்ளுவன் வழி வாழ்க்கை நடாத்தியுள்ளார் என்பதனை மிகத் தெளிவாக நிருபித்துள்ளது.

சீமாட்டி அம்மா அவர்களது வாழ்கை என்பது வெறுமனே அவர்களது குடும்பத்தோடும் அவர்களது சுற்றத்தோடும் மட்டும் நிறைவடைந்து விட்டது ஒன்றல்ல. நான் தவிசாளராக பதவி ஏற்ற நாள் முதலாக அமரத்துவம் அடைந்த தாய் அவர்களின் கிராமத்திற்கு பல தடவைகள் பல நிகழ்விற்கும் சென்றுள்ளேன் அங்கு சீமாட்டி அம்மா அவர்களது சமூகம் சார் சேவைகளை அறிந்துள்ளேன் குறிப்பாக இவ் கற்பக சோலை கிராமத்தின் திலகமாக விளங்கிவரும் நன்மை விருத்திச் சங்கத்தின பவள விழா ஆண்டில் அவ் கட்டிடத்திற்கு மின் ஒளி அமைத்து அதனை அழகு பார்த்து மகிழ்ந்துள்ள செய்தி அறிந்தேன். இவ் பெருமையும் புகழினையும் அமரர் அவர்களது இளைய மகனாகிய எமது வலிகாமம் மேற்கு பிரதேச சபையின் தொழில்நுட்ப உத்தியோகத்தராக கடமை ஆற்றிவரும் திரு வே.புலேந்திரன் அவர்களுடன் பகிர்ந்துள்ள நினைவுகள் இன்றும் என் நினைவில் உள்ளது. இவ் தாயின் நல் வழிகாட்டலிலே வழி நடந்த அவர்களது பிள்ளைகளும் கூடுதலாக சமூகம் நோக்கிய சிந்தனையில் இன்றும் செயற்பட்டு வருவதனை அனைவரும் நன்கு அறிவர்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இதே போன்று அம்மா சீமாட்டி அவர்களது விருந்தினர்களை இன்முகத்தோடு வரவேற்கும் பண்பு மிக மேலான ஓர் செயலாகவே கருத வேண்டும். சீமாட்டி அவர்களது புதல்வியார் திருமதி.பரமேஸ்வரன் மாலா அவர்களது இல்லத்திற்கு சென்ற போதெல்லாம் ஓர் தவிசாளராக அல்லாது தனது பிள்ளைகள் போலவே எம்மையும் வரவேற்று உபசரிக்கும் பண்பு என்றும் என் நினைவில் மறக்க முடியாத ஒன்றாகவே உள்ளது. இப் பண்பை அமரத்துவம் அடைந்த சீமாட்டி அம்மாவின் பிள்ளைகளிலும் அவதானித்துள்ளேன்.

ஒரு மனிதனின் வாழ்க்கைக் காலத்தில் அவர்களால் என்ன நிறைவு செய்யப்பட்டது எனபதற்கு மேலாக அவரது மறைவின் பின் என்ன தொடர்ந்து நிலை பெற்றுள்ளது என்பது மிக மிக்கியமானது என்பது எனது சிற்றறிவுக்கு எட்டிய வகையில் குறிப்பிட முடியும் இந்த வகையில் இன்று எம் மத்தியில் அம்மா சீமாட்டி அவர்கள் இல்லை என்பதற்கு மேலாக அம்மா அவர்களது உயரிய நற்குணங்கள் இன்றும் அவர்களது மக்கட்செல்வங்கள் வாயிலாக நிலை பெற்றுள்ளது என்பதில் திருப்தி அடைந்து கொள்வதுடன் சீமாட்டி அம்மா அவர்களது இழப்பால் துயருற்றிருக்கும் பாச உள்ளங்களுக்கு எனது ஆழ்ந்த அனுதாபங்களை தெரிவித்துக் கொள்ளும் அதே வேளை அம்மா அவர்களது ஆத்மா சாந்தி அடைய இறைவனை பிரார்த்திக்கின்றேன்.

**என்றும் மக்கள் சேவையில்**
**திருமதி.நாகரஞ்சினி.ஐங்கரன், (R.I.M.P)**
*தவிசாளர்,*
**வலி மேற்கு பிரதேச சபை,**
**சுழிபுரம்.**

**ஆர்புலக்கடல்**

கடல் நன்றாக வற்றி இருக்கும் காலத்தில்
கரையிலிருந்து அளக்கப்படும்
12 கடல் மைல் தூரம் (Nautical)
கரையோர அரசின் ஆழ்புலக் கடலாகும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சீமாட்டியாகவே வாழ்ந்த சீமாட்டி

அம்மா என்பது ஓர் அற்புதமானசொல், மனித உயிரின் ஆதி மூலம், வாழ்வின் தொடக்கம், அன்பின் உச்சம், தியாகத்தின் உறவிடம், பொறுமையின் சிகரம், அறிவின் ஆரம்பம், அரவணைப்பின் உன்னதம், ஆறுதலின் ஊற்று, ஒளிதருவதில் மெழுகுவர்த்தி, வாழ்வழிக்கும் கருணைக்கடல், ஆசி நல்கும் தூய இதயம் .... இவ்வாறு முடிவின்றி நீளும் பட்டியல்தானே அம்மா? ஆம் காசு இருந்தாலும் வாங்கமுடியாத ஒன்று அல்லவா?

அம்மா இல்லாத குழந்தைக்கு அம்மாவிற்கு ஈடாக இத்தனையும் வழங்க யாரால் முடியும்? அம்மாவின் இழப்பைதான் ஈடுசெய்ய முடியுமா?

பத்து மாதங்கள் சுமந்து பத்து செல்வங்களை பெற்று பண்பாக வளர்த்து இப்பாரினிலே பல சிறப்புக்களையும் பெற்ற சீமாட்டி என்று செல்லமாக அழைக்கப்பட்டு சீமாட்டியாகவே வாழ்ந்த அமரர் திருமதி. செல்வரத்தினம் வேலாயுதம்பிள்ளை அவர்களின் வாழ்வும், வரலாறும் முன்னுதாரணமானவை.

பொருளாதார வசதிகள் இருந்தும் ஒன்று இரண்டு குழந்தைகளை பெற்று வளர்த்து உருவாக்குவதே பெரிய விடயமாக கருதப்படும் இக்காலத்தில் பத்துப் பிள்ளைகளைப் பெற்று பொருளாதார வசதி குறைந்த நிலையிலும் தன் உடல் வருத்தி பக்குவமாக வளர்த்து தனது பிள்ளைகளை நல்லவர்களாகவும், வல்லவர்களாகவும் உருவாக்கிய அம்மையாரின் வாழ்வு பெருமையானதே!

அவரது சிரேஷ்ட புதல்வன் திரு வே.கிருஷ்னானந்தன் அவர்கள் தனது இளைய சகோதரர்கள் எல்லோரும் வாயாரப் போற்றும் அண்ணா என்ற உயர்ந்த நிலையை நிலைநிறுத்தி வாழ்பவர். அம்மா மீது அளவு கடந்த பக்தியும் பாசமும் உள்ளவர். அதுபோன்று தனது சகோதரர்கள் மீதும் அளவு கடந்த பற்றும், பாசமும் மட்டுமன்றி அவர்கள் நன்றாக வாழவேண்டும் என்று என்றுமே சிந்திப்பவர்.

நல்ல ஒரு கூட்டுறவாளன், ஆசான், எழுத்தாளன், பத்திரிகையாளன் என்ற பல வகிபாகங்களை கொண்ட இவரை தலைமகனாகப் பெற்ற இந்த அம்மா ஒரு பாக்கியசாலியே!


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தனது இறப்பின் போது பத்து பிள்ளைகளும் பக்கத்தில் நிறகவேண்டும் என்ற அமரர் அவர்களின் அற்புதமான ஆசையை பிள்ளைகள் நிறைவு செய்திருக்கின்றார்கள். இப்பாக்கியத்தை உலகில் எத்தனைபேர் தான் பெறமுடியும். இது ஒன்றே அவரது ஆன்மா ஆனந்தமாக இனிதே அமைதியடையப் போதுமானது.

என் செய்வோம் சாவு என்பதற்கு சாவு இல்லாதவரை. பிறந்தவர் இறப்பது நிகழுமே! இது நியதியே. அம்மாவின் ஆத்ம சாந்திக்காக அவர்தம் பிள்ளைகளுடன் இணைந்து நாமும் பிரார்த்திப்போமாக.

பத்துப் பெற்றவள் பாக்கியசாலியே!
ஓம் சாந்தி சாந்தி சாந்தி !!!

**திருமதி.வேதவல்லி.செல்வரத்தினம் M.A**
**செயலாளர், யாழ் மாவட்ட கூட்டுறவு சபை.**

**பசி வந்திடப் பத்தும் பறந்துபோம்....**
**மானம், குலம், கல்வி, வண்மை,**
**அறிவுடைமை, தானம், தவம்,**
**முயற்சி, தாளாண்மை, காமுறுதல்.**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மரண அறிவித்தல்கள்



**திருமதி செல்வரத்தினம் (சீமாட்டி)**
**வேலாயுதம்பிள்ளை**

வட்டு-வடக்கு, சித்தன்கேணியைச் சேர்ந்த திருமதி செல்வரத்தினம் (சீமாட்டி) வேலாயுதம் பிள்ளை நேற்று (24.01. 2015) சனிக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற கிருஷ்ணர் வேலாயுதம்பிள்ளையின் அன்பு மனைவியும், காலஞ்சென்ற வர்களான சண்முகம்- மாணிக்கம் தம்பதியரின் அன்பு மகளும், காலஞ்சென்றவர்களான கிருஷ்ணர் - சிவக்கொழுந்து தம்பதியினரின் அருமை மருமகளும், காலஞ்சென்றவர்களான திரு மதி பு.தங்கரத்தினம், திருமதி தெ. அழகரத்தினம் மற்றும் பொ. பாக்கியரத்தினம், காலஞ்சென்ற ச. லோகேஸ்வரன் ஆகியோரின் அன்புச் சகோதரியும், கிருஷ்ணானந்தன், கவீந்திரன், தயானந்தன், வாணி, ஜீவா, உமா, கலா, ரவீந்திரன், மாலா, புலேந்திரன் ஆகி யோரின் அன்புத் தாயும், லோகேஸ்வரி, திலகேஸ்வரி, புஸ்பராணி, இராசரத்தினம், வீரசிங்கம், கிருஷ்ணகுமார், நடேசலிங்கம், ரத்தினகுமாரி, பரமேஸ்வரன், தவச்செல்வி ஆகியோரின் அன்பு மாமியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் பற்றிய விவரம் பின்னர் அறிவிக்கப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

**வட்டுக்கோட்டை வடக்கு,**
**டச்சு வீதி, சித்தன்கேணி.**

**தகவல்:**
**குடும்பத்தினர்.**

## மரண அறிவித்தல்கள்



**திருமதி செல்வரத்தினம் (சீமாட்டி)**
**வேலாயுதம்பிள்ளை**

வட்டு-வடக்கு, சித்தன்கேணியைச் சேர்ந்த திருமதி செல்வரத்தினம் (சீமாட்டி) வேலாயுதம்பிள்ளை 24.01. 2015 சனிக்கிழமை காலமானார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (27.01.2015) செவ்வாய்க் கிழமை அவரது இல்லத்தில் நடை பெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக முற்பகல் 10.00 மணிக்கு வழுக்கையாறு இந்து மயானத்துக்கு எடுத்துச்செல் லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

**வட்டுக்கோட்டை வடக்கு,**
**டச்சு வீதி, சித்தன்கேணி.**

**தகவல்:**
**குடும்பத்தினர்.**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கண்ணீர் அஞ்சலி

அன்னை மடியில்
27 . 10 . 1928



இறைவன் அடியில்
24 . 01 . 2015

எமது கழக அங்கத்தவர்களாகிய ப.கண்ணன், ப.சதுர்வேதன், பு.கோகிலன் ஆகியோரின் பேத்தியும், எமது கழக ஆதரவாளர் திரு.வே புலேந்திரனின் தாயாருமான

## அமரர். வேலாயுதம்பிள்ளை செல்வரத்தினம்

அன்பிற்கோர் உறைவிடமாய்
அறத்திற்கோர் இருப்பிடமாய்
இல்லத்திற்கோர் இனியவளாய்
மனை சிறக்க வாழ்ந்து
சிரித்த பங்கயம் என பூத்திருந்த உங்கள் மேனி
வாடி மண்ணில் வீழ்ந்திருந்த போது
வருந்தியே அழுதிட்டோம் அம்மாவே !
ஆனாலும் உங்கள் சிரித்த வதனம்
சிந்தையிலே வந்து வந்து சிதைக்கிறதே
எமையெல்லாம் ......

அன்னாரின் பிரிவால் வாடிநிற்கும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களை தெரிவித்துக்கொள்வதோடு அன்னாரின் ஆத்மா சாந்தியடைய ஆண்டவனைப் பிரார்த்திக்கின்றோம்.

ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!! .......

நிர்வாகம்
கற்பகச்சோலை
இளைய நட்சத்திர விளையாட்டுக் கழகம்

சாய்ராம் பிறிண்டேர்ஸ், சங்கானை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கண்ணீர்க்காணிக்கை

அன்னை மடியில் | இறைவன் அடியில்

27.10.1928 | 24.01.2015



டச்சு வீதி வட்டுக்கோட்டை சேர்ந்த

## அமரர். வேலாயுதம்பிள்ளை செல்வரத்தினம்

அன்பு முகத்தவரை அரவணைக்கும் ஆர்வலரை
தங்கமனம் கொண்ட தயவான அம்மாவே இவ்வுலகில்
நலமான குடும்பத்துடன் நாலாறும் போற்றி
மறவா அன்புடனே நினைப்பாய்
உம்மையெல்லாம் ஊரார் உற்றார் போற்றி வாழ்ந்திட்ட அம்மாவே
மண்ணில் பிறந்த பயன் மானிடம் பின் நினைப்பது
அன்பான அருள்வார்த்தை என்றும் எம் உள்ளத்தில்
குடும்பத்தாரை தனியே அலையில் தவிக்கவிட்டு
என்றும் நினைக்கவைக்க மறைந்திட்டாயோ
என்று காண்போம் உந்தன் அன்பு முகத்தினை
இறையடி நிழலே இன்முகத்துடன் இருக்க
இறைஞ்சி நின்று விழிநீர் சொரிந்திடும் உள்ளங்கள்

அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கிறோம்.

ஓம் சாந்தி சாந்தி சாந்தி

வலிகாமம் மேற்கு பிரதேசசபை
சுழிபுரம்.

சாய்ராம் பிறின்டேர்ஸ், சங்கானை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கண்ணீர்ப் பூக்கள்

கற்பகச்சோலை சனசமூக நிலையம், கற்பகச்சோலை கிராம அபிவிருத்திச் சங்கம்
ஆகியவற்றின் முன்னாள் தலைவர் திரு.வே புலேந்திரனின் தாயார்

## அமரர். திருமதி வேலாயுதம்பிள்ளை செல்வரத்தினம்

மண்ணில்
27 . 10 . 1928



விண்ணில்
24 . 01 . 2015

அன்பின் திரு உருவமே!
பாசத்தின் பிறப்பிடமே!
அணையாத அகல் விளக்கே!
பாச மகன் புலேந்திரனின்!
அன்பு மழை பொழிந்த!
பாசமிகு அம்மாவே!
அன்பு மக்களையும் பரிதவிக்க விட்டு
அமரர் உலகம் சென்றதேனோ!

அன்னாரின் பிரிவால் வாடிநிற்கும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களை தெரிவித்துக் கொள்வதோடு அன்னாரின் ஆத்மா சாந்தியடைய ஆண்டவனைப் பிரார்த்திக்கின்றோம்.

ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!! ....

அன்னாரின் பிரிவால் துயரும்
நிர்வாகம்
கற்பகச்சோலை சனசமூக நிலையம்,
கற்பகச்சோலை கிராம அபிவிருத்திச்சங்கம்.

சாய்ராம் பிறிண்டேர்ஸ், சங்கானை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆனந்த மனோலயம் தில்லையில் அருளிய

# திருப்பொற்சுண்ணம்

## எண்சீர் ஆசிரிய விருத்தம்

முத்து நல் தாமம்பூ மாலை தூக்கி
முளைக்குடந் தூபம்நல் தீபம் வைம்மின்
சத்தியுஞ் சோமியும் பார்மகளும்
நாமகளோடு பல் லாண்டிசைமின்
சித்தியுங் கௌரியும் பார்ப்பதியும்
கங்கையும் வந்து கவரிகொண்மின்
அத்தன்ஐ யாறன் அம்மானைப்பாடி
ஆடப்பொற் சுண்ணம் இடித்துநாமே 1

பூவியல் வார்சடை எம்பிராற்குப்
பொற்றிருச் சுண்ணம் இடிக்க வேண்டும்
மாவின் வடுவகி ரன்னகண்ணீர்
வம்மின்கள் வந்துடன் பாடுமின்கள்
கூவுமின் தொண்டர் புறம்நிலாமே
குனிமின் தொழுமின்எங் கோன் எங் கூத்தன்
தேவியுந் தானும்வந் தெம்மையாளச்
செம்பொன்செய் சுண்ணம் இடித்துநாமே 2

சுந்தர நீறணிந் தும் மெழுகித்
தூய பொன் சிந்தி நிதிநிரப்பி
இந்திரன் கற்பகம் நாட்டி யெங்கும்
எழிற் சுடர் வைத்துக் கொடியெடுமின்
அந்தரர் கோன் அயன் தன்பெருமான்
ஆழியான் நாதன் நல் வேலன் தாதை
எந்தரம் ஆளுமை யாள் கொழுநற்கு
ஏய்ந்த பொற் சுண்ணம் இடித்துநாமே. 3



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

காசணி மின்கள் உலக்கையெல்லாங்
காம்பணி மின்கள் கறையுரலை
நேச முடைய அடியவர்கள்
நின்று நிலாவுக என்று வாழ்த்தித்
தேசமெல் லாம் புகழ்ந் தாடுங்கச்சித்
திருவேகம் பன்செம்பொற் கோயில் பாடிப்
பாச வினையைப் பறித்துநின்று
பாடிப்பொற் சுண்ணம் இடித்துநாமே. 4

அறுகெடுப் பார்அய னும் அரியும்
அன்றிமற் றிந்திர னோடமரர்
நறுமுறு தேவர்க ணங்க ளெல்லாம்
நம்மிற் பின் பல்லதெ டுக்கவொட்டோம்
செறிவுடை மும்மதில் எய்தவில்லி
திருவேகம் பன் செம்பொற் கோயில் பாடி
முறுவற் செவ் வாயினீர் முக்கண் அப்பற்கு
ஆடப் பொற் சுண்ணம் இடித்துநாமே. 5

உலக்கை பல ஓச்சு வார்பெரியர்
உலகமெ லாம் உரல் போதாதென்றே
கலக்க அடியவர் வந்துநின்றார்
காண உலகங்கள் போதாதென்றே
நலக்க அடியோமை ஆண்டுகொண்டு
நாண் மலர்ப் பாதங்கள் சூடத்தந்த
மலைக்கு மருகனைப் பாடிப்பாடி
மகிழ்ந்து பொற் சுண்ணம் இடித்து நாமே. 6

சூடகந் தோள் வளை ஆர்ப்ப ஆர்ப்பத்
தொண்டர் குழாமெழுந் தார்ப்ப ஆர்ப்ப
நாடவர் நந்தம்மை ஆர்ப்பஆர்ப்ப
நாமும் அவர்தம்மை ஆர்ப்ப ஆர்ப்ப
பாடகம் மெல்லடி யார்க்கும் மங்கை
பங்கினன் எங்கள் பராபரனுக்கு
ஆடக மாமலை அன்னகோவுக்கு
ஆடப்பொற் சுண்ணம் இடித்து நாமே. 7



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வாட்தடங் கண்மட மங்கைநல்லீர்
வரிவளை ஆர்ப்பவண் கொங்கை பொங்கத்
தோட்டிரு முண்டந் துதைந்திலங்கச்
சோத்தெம்பி ரான் என்று சொல்லிச் சொல்லி
நாட்கொண்ட நாண்மலர்ப் பாதங்காட்டி
நாயிற்க டைப்பட்ட நம்மையிம்மை
ஆட்கொண்ட வண்ணங்கள் பாடிப்பாடி
ஆடப் பொற் சுண்ணம் இடித்துநாமே 8

வையகம் எல்லாம் உரலதாக
மாமேரு என்னும் உலக்கைநாட்டி
மெய்யெனும் மஞ்சள் நிறையஅட்டி
மேதகு தென்னன் பெருந்துறையான்
செய்ய திருவடி பாடிப்பாடிச்
செம்பொன் உலக்கை வலக்கைபற்றி
ஐயன் அணி தில்லை வாணனுக்கே
ஆடப்பொற்சுண்ணம் இடித்து நாமே. 9

முத்தணி கொங்கைகள் ஆடஆட
மொய்குழல் வண்டினம் ஆடஆடச்
சித்தஞ் சிவனொடும் ஆடஆடச்
செங்கயற் கண்பனி ஆடஆடப்
பித்தெம் பிரானொடும் ஆடஆடப்
பிறவி பிறரொடும் ஆடஆட
அத்தன் கருணையோ டாடஆட
ஆடப்பொற் சுண்ணம் இடித்து நாமே. 10

மாடு நகைவாள் நிலா வெறிப்ப
வாய்திறந் தம்பவ ளந்துடிப்பப்
பாடுமின் நந்தம்மை ஆண்டவாறும்
பணி கொண்ட வண்ணமும் பாடிப்பாடித்
தேடுமின் எம்பெரு மானைத் தேடிச்
சித்தங் களிப்பத் திகைத்துத் தேறி
ஆடுமின் அம்பலத் தாடினானுக்கு
ஆடப் பொற்சுண்ணம் இடித்துநாமே. 11


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மையமர் கண்டனை வானநாடர்
மருந்தினை மாணிக்கக் கூத்தன் தன்னை
ஐயனை ஐயர்பிரானை நம்மை
அகப்படுத் தாட் கொண் டருமை காட்டும்
பொய்யர்தம் பொய்யனை மெய்யர் மெய்யைப்
போதரிக் கண்ணினைப் பொற்றொடித்தோள்
பையர வல்குல் மடந்தைநல்லீர்
பாடிப்பொற் சுண்ணம் இடித்துநாமே. 12

மின்னிடைச் செந்துவர் வாய்க்கருங்கண்
வெண்ணகைப் பண்ணமர் மென்மொழியீர்
என்னுடை ஆரமுது எங்கள் அப்பன்
எம்பெரு மான் இம வான்மகட்குத்
தன்னுடைக் கேள்வன் மகன்தகப்பன்
தமையன்எம் ஐயன் தாள்கள் பாடிப்
பொன்னுடைப் பூண்முலை மங்கை நல்லீர்
பொற்றிருச் சுண்ணம் இடித்துநாமே. 13

சங்கம் அரற்றச் சிலம் பொலிப்பத்
தாழ்குழல் சூழ்தரு மாலையாடச்
செங்கனி வாய்இத முந்துடிப்பக்
சேயிழை யீர்சிவ லோகம்பாடிக்
கங்கை இரைப்ப அராஇரைக்கும்
கற்றைச் சடைமுடி யான் கழற்கே
பொங்கிய காதலிற்கொங்கை பொங்கப்
பொற்றிருச் சுண்ணம் இடித்து நாமே 14



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஞானக் கரும்பின் தெளிவைப்பாகை
நாடற் கரிய நலத்தைநந்தாத்
தேனைப் பழச்சுவை ஆயினானைச்
சித்தம் புகுந்து தித்திக்கவல்ல
கோனைப் பிறப்பறுத் தாண்டு கொண்ட
கூத்தனை நாத்தழும் பேறவாழ்த்திப்
பானல் தடங்கண் மடந்தைநல்லீர்
பாடிப்பொற் சுண்ணம் இடித்துநாமே 15

ஆவகை நாமும்வந் தன்பர்தம்மோடு
ஆட்செயும் வண்ணங்கள் பாடிவிண்மேல்
தேவர்க னாவிலுங் கண்டறியாச்
செம்மலர்ப் பாதங்கள் காட்டுஞ் செல்வச்
சேவகம் ஏந்திய வெல்கொடியான்
சிவபெரு மான் புரஞ் செற்றகொற்றச்
சேவகன் நாமங்கள் பாடிப்பாடிச்
செம்பொன்செய் சுண்ணம் இடித்துநாமே. 16

தேனக மாமலர்க் கொன்றைபாடிச்
சிவபுரம் பாடித் திருச்சடைமேல்
வானக மாமதிப் பிள்ளைபாடி
மால்விடை பாடி வலக்கையேந்தும்
ஊனக மாமழுச் சூலம் பாடி
உம்பரும் இம்பரும் உய்யவன்று
போனக மாகநஞ் சுண்டல் பாடிப்
பொற்றிருச் சுண்ணம் இடித்துநாமே. 17



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அயன்தலை கொண்டுசெண் டாடல்பாடி
அருக்கன் எயிறு பறித்தல்பாடிக்
கயந்தனைக் கொன்றுரி போர்த்தல் பாடிக்
காலனைக் காலால் உதைத்தல்பாடி
இயைந்தன முப்புரம் எய்தல்பாடி
ஏழை அடியோமை ஆண்டு கொண்ட
நயந்தனைப் பாடிநின் றாடியாடி
நாதற்குச் சுண்ணம் இடித்துநாமே. 18

வட்ட மலர்க்கொன்றை மாலைபாடி
மத்தமும் பாடி மதியும் பாடிச்
சிட்டர்கள் வாழுந்தென் தில்லைபாடிச்
சிற்றம்பல த்தெங்கள் செல்வம்பாடிக்
கட்டிய மாசுணக் கச்சைபாடிக்
கங்கணம் பாடிக் கவித்தகைம்மேல்
இட்டுநின் றாடும் அரவம் பாடி
ஈசற்குச் சுண்ணம் இடித்துநாமே. 19

வேதமும் வேள்வியும் ஆயினார்க்கு
மெய்ம்மையும் பொய்மையும் ஆயினாக்குச்
சோதியு மாய் இரு ளாயினார்க்குத்
துன்பமு மாய்இன்பம் ஆயினார்க்குப்
பாதியு மாய்முற்றும் ஆயினார்க்குப்
பந்தமு மாய்வீடும் ஆயினாருக்கு
ஆதியும் அந்தமும் ஆயினாருக்கு
ஆடப்பொற் சுண்ணம் இடித்துநாமே. 20



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆத்திசூடி

## கடவுள் வாழ்த்து

**ஆத்தி சூடி அமர்ந்த தேவனை**
**ஏத்தி ஏத்தி தொழுவோம் யாமே.**

ஆத்தி ஆத்திப் பூமாலையை: சூடி - அணிந்திருக்கும் சிவபெருமானின்: அமர்ந்த - அன்புக்கு உரிய: தேவனை - விநாயகப் பெருமானை: ஏத்தி ஏத்தி - எப்பொழுதும் போற்றி வழிபாடு செய்து: தொழுவோம் யாமே - நாம் வணங்குவோம்.

ஆத்திப் பூமாலையை அணிந்துள்ள சிவபெருமானின் பிரியத்துக்கு உரிய விநாயகப் பெருமானை எப்பொழுதும் வழிபட்டு நாம் வணங்கு வோம்.

## நூல்

**அறஞ் செய விரும்பு** 01
அறம் - தர்மம்: செய - செய்வதற்கு: விரும்பு - ஆசைகொள்.
நற்காரியங்களைச் செய்வதற்கு ஆசைப்படவேண்டும்.

**ஆறுவது சினம்** 02
ஆறுவது - தணிக்க வேண்டுவது: சினம் - கோபம்.
கோபத்தைத் தணியச் செய்யவேண்டும்.

**இயல்வது கரவேல்.** 03
இயல்வது - இயன்றதை: கரவேல் - செய்யாமல் மறைத்து வைக்கக்கூடாது.
இயன்றதை ஒளிக்காமல் செய்யவேண்டும்.

**ஈவது விலக்கேல்** 04
ஈவது - உதவி செய்வதை: விலக்கேல் - தடுக்காதே.
பிறருக்கு உதவி செய்வதைத் தடுக்கக் கூடாது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**உடையது விளம்பேல்.** 05

உடையது - உன்னிடம் இருக்கும் நன்மை தீமைகளை: விளம்பேல் - வெளியில் சொல்லாதே.

உன்னிடம் இருக்கும் நன்மை, தீமைகளை பிறரிடம் கூறாதே.

**ஊக்கமது கைவிடேல்** 06

ஊக்கம் - துணிவை: கைவிடேல் - கைவிடக் கூடாது.

செயலில் ஈடுபடும்பொழுது தடங்கல் ஏற்படு மானால் அதைக்கண்டு தைரியத்தை கைவிடக்கூடாது.

**எண் எழுத்து இகழேல்** 07

எண் - கணக்குக்கு ஆதாரமான எண்ணையும்: எழுத்து - இலக்கியத்துக்கு ஆதாரமான எழுத்தையும்: இகழேல் - குறைவாக எண்ணக்கூடாது.

கணிதம், இலக்கியம் இவற்றை இகழ்ந்து ஒதுக்கக் கூடாது.

**ஏற்பது இகழ்ச்சி** 08

ஏற்பது - பிறரிடம் சென்று யாசிப்பது: இகழ்ச்சி - இழிவு, பிறரிடம் போய் யாசிப்பது இழிவாகும்.

**ஐயம் இட்டு உண்.** 09

ஐயம் - பிச்சை கேட்பவர்களுக்கு: இட்டு - உணவு அளித்து: உண் - நீ சாப்பிட வேண்டும்.

பிச்சை கேட்பவர்க்கு உணவு கொடுத்த பின்னர் சாப்பிட வேண்டும்.

**ஒப்புரவு ஒழுகு** 10

ஒப்புரவு - உலக அனுபவத்தைத் தெரிந்து: ஒழுகு - நடந்துகொள்.

உலக அனுபவத்தை அறிந்து அதற்கேற்ப நடந்துகொள்.

**ஓதுவது ஒழியேல்.** 11

ஓதுவது - படிப்பதை: ஒழியேல் - விட்டுவிடாதே.

படிப்பதை விட்டுவிடக்கூடாது.

**ஔவியம் பேசேல்** 12

ஔவியம் - பொறாமை: பேசேல் - பேசக்கூடாது.

பொறாமைக் குணத்தோடு சொல்லக்கூடாது.

**அஃகஞ் சுருக்கேல்** 13

அஃகம் - தானியங்களை: சுருக்கேல் - குறைத்து நிறுக்காதே.

தானியங்களை எடை அளவு குறைத்து நிறுக்கக்கூடாது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**கண்டு ஒன்று சொல்லேல்** **14**

கண்டு - ஒன்றைப் பார்த்து: ஒன்று - பாராத வேறு ஒன்றை: சொல்லேல் - சொல்லக்கூடாது.

கண்ணால் பார்த்ததைத் தவிர வேறு எதையும் கூறாதே.

**ஙப்போல் வளை** **15**

ஙப்போல் - "ங" என்ற எழுத்தைப் போல்: வளை - எல்லோரையும் ஆதரிப்பாயாக.

"ங" என்ற எழுத்தைப் போல அனைவரையும் இணைந்து செல்ல வேண்டும்.

**சனி நீராடு** **16**

சனி - சனிக்கிழமை தோறும்: நீராடு - எண்ணெய் தேய்த்து நீரில் குளி.

சனிக்கிழமை தோறும் எண்ணெய் தேய்த்துக் குளிப்பாயாக.

**ஞயம்பட உரை** **17**

ஞயம்பட - கனிவான முறையில்: உரை - கூறு கனிவான முறையில் எதையும் கூறுவாயாக.

கனிவான முறையில் எதையும் கூறுவாயாக.

**இடம்பட வீடு எடேல்.** **18**

வீடு - இல்லத்தை: இடம் பட - இடம் உபயோக மற்றபடி: எடேல் - கட்டாதே.

தேவைக்கு அதிகமாக வீட்டைப் பெரிதாக அமைக்காதே.

**இணக்கம் அறிந்து இணங்கு** **19**

இணக்கம் - ஒருவரிடம் தொடர்பு கொள்ளுமுன்: அறிந்து - அவர் தகுந்தவரா என அறிந்து: இணங்கு - தொடர்பு கொள்ளவேண்டும்.

நட்பு கொள்ளுமுன் அவர நல்லவரா என்பதை தீர அறிந்து, அதன் பிறகு தொடர்புகொள்ள வேண்டும்.

**தந்தை தாய்ப் பேண்** **20**

தந்தை தாய் - தந்தையையும் தாயையும்: பேண் - காப்பாற்ற வேண்டும்.

பெற்றோரைப் போற்றி ஆதரிக்கவேண்டும்.

**நன்றி மறவேல்** **21**

நன்றி - ஒருவர் செய்த உதவியை: மறவேல் - மறக்கக் கூடாது.

ஒருவர் செய்த உதவியை மறந்து விடக்கூடாது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**பருவத்தே பயிர்செய்** 22

பருவத்தே - தகுந்த பருவகாலத்திலே: பயிர் செய் - பயிரிட முற்படு.
உரிய காலத்திலே உழுது பயிரிட முற்படவேண்டும்.

**மண் பறித்து உண்ணேல்** 23

மண்பறித்து - மற்றவருடைய நிலத்தை அபகரித்து: உண்ணேல் உண்ணக் கூடாது.
மற்றவருடைய நிலத்தை அபகரித்து அதை உண்டு வாழக்கூடாது.

**இயல்பு அலாதன செயேல்** 24

இயல்பு அலாதன - வழக்கத்துக்கு மாறான காரியத்தை: செயேல் - செய்தல் கூடாது.
வழக்கத்துக்கு மாறான காரியத்தை செய்யக் கூடாது.

**அரவம் ஆடேல்** 25

அரவம் - பாம்புடன்: ஆடேல் - விளையாடாதே.
பாம்போடு விளையாடினால் ஆபத்து நேரிடும்.

**இலவம் பஞ்சில் துயில்** 26

இலவம் பஞ்சில் - இலவம் பஞ்சில் தயாரித்த மெத்தையில்: துயில் - நித்திரை செய்.
இலவம்பஞ்சு மெத்தையில் படுத்து நித்திரைசெய்வது நன்மைதரும்.

**வஞ்சகம் பேசேல்** 27

வஞ்சகம் - உள்ளத்தில் ஒன்று வெளியில் ஒன்று: பேசேல் - பேசாதே.
கபடமாகப் பேசக்கூடாது.

**அழகு அலாதன செயேல்** 28

அழகு அலாதன - மற்றவர் இகழத்தக்க காரியத்தை: செயேல் - செய்யாதே.
பிறர் இகழத்தக்கவற்றை செய்யக்கூடாது.

**இளமையில் கல்** 29

இளமையில் - சிறு பிராயத்தில்: கல் - கல்வி கற்றுக்கொள்.
சிறு பிராயத்திலே கல்வியைக் கற்பது சிறப்பாகும்.

**அரனை மறவேல்** 30

அரனை - இறைவனை: மறவேல் - மறந்து விடாதே.
இறைவனை மறவாமல் துதித்து வணங்க வேண்டும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**அனந்தல் ஆடேல்** 31

அனந்தல் - கடலில்: ஆடேல் - நீந்தி விளையாடாதே.
கடலில் நீந்தி விளையாடினால் ஆபத்து நேரிடும்.

**கடிவது மற** 32

கடிவது - கோபத்தை உண்டாக்கும் சொற்களை: மற - மறந்துவிடு.
பிறருக்கு கோபம் உண்டாக்கக்கூடிய சொற்களை கூறக்கூடாது.

**காப்பது விரதம்** 33

காப்பது - உயிர்வதை செய்யாமல் காப்பது: விரதம் - நோன்பாகும்.
பிற உயர்களுக்கு ஆபத்து நேரிடாமல் காப்பது நோன்பு ஆகும்.

**கிழமைப்பட வாழ்** 34

கிழமைப்பட - மற்றவர்களுக்கு உதவியாக: வாழ் - வாழ்வாயாக.
தனக்கே அன்றி மற்றவர்களுக்கும் உதவியாக வாழ வேண்டும்.

**கீழ்மை அகற்று** 35

கிழ்மை - கீழான செயல்களை: அகற்று - ஒதுக்கிவிடு.
கீழ்த்தரமான செய்கைகளை செய்யாமல் நீக்கிவிட வேண்டும்.

**குணமது கைவிடேல்** 36

குணமது - நன்மையான குணங்களை: கைவிடேல் - கைவிடாதே.
நற்பண்புகளை கைவிடாமல் வாழ வேண்டும்.

**கூடிப் பிரியேல்.** 37

கூடி - பண்பானவர்களோடு உறவுகொண்டு: பிரியேல் - பிரிந்து விடக்கூடாது.

நற்பண்புடையவர்களோடு தொடர்புகொண்டு பிறகு அவர்களை விட்டுப் பிரியக்கூடாது.

**கெடுப்பது ஒழி** 38

கெடுப்பது - மற்றவருக்கு தீங்கு செய்வதை: ஒழி - விட்டுவிடு.
ஒருவருக்கும் தீங்கு செய்யக்கூடாது.

**கேள்வி முயல்** 39

கேள்வி - பலவகையாலும் கேட்டு அறியும் அறிவை: முயல் - முயன்று பெற்றுக்கொள்.

அறிவாளிகள் சொற்களை ஆவலோடு கேட்டுத் தெரிந்துகொள்.

**கைவினை கரவேல்** 40

கைவினை - கைத்தொழில்களை: கரவேல் - ஒளிக்காதே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கற்ற கைத்தொழில்களை மற்றவருக்கும் கற்றுக்கொடு.

**கொள்ளை விரும்பேல் 41**

கொள்ளை - மற்றவர் பொருளைக் கொள்ளை அடிக்க: விரும்பேல் - ஆசைப்படாதே.

ஒருவருடைய பொருளை கொள்ளை அடிக்க ஆசைப்படாதே.

**கோதாட்டு ஒழி 42**

கோது - குற்றமுள்ள: ஆட்டு - விளையாட்டுக்களை: ஒழி - விட்டு விடுவாயாக.

ஆபத்தை உண்டாக்கக்கூடிய விளையாட்டுக்களில் ஈடுபடாதே.

**சக்கர நெறி நில் 43**

சக்கர நெறி - அரசின் சட்ட திட்டத்திற்கேற்ப: நில் - நடப்பாயாக.

அரசு ஆணைகளை மதித்து நடக்கவேண்டும்.

**சான்றோர் இனத்திரு 44**

சான்றோர் - அறிவாளிகளுடைய: இனத்து - குழுவில் சார்ந்து: இரு - இருப்பாயாக.

அறிஞர்களின் குழுவிலே சேர்ந்து இருப்பது மேன்மை அளிக்கும்.

**சித்திரம் பேசேல் 45**

சித்திரம் - பொய்யான சொற்களை: பேசேல் - பேசாதே.

பொய்யை அலங்காரமாக உண்மைபோல பேசக்கூடாது.

**சீர்மை மறவேல் 46**

சீர்மை - சீரான செயல்களை: மறவேல் - மறந்து விடாதே.

சிறப்பான செயல்களை மறந்து விடவேண்டாம்.

**சுளிக்கச் சொல்லேல் 47**

சுளிக்க - முகம் கோணும்படியான: சொல்லேல் - சொற்களைச் சொல்லாதே.

மற்றவர் முகம் கோணும்படியான சொற்களைக் கூறக்கூடாது.

**சூது விரும்பேல் 48**

சூது - சூதாட்டங்களை: விரும்பேல் - விளையாட ஆசைப்படாதே.

சூதாட்டங்களினால் பொருள நஷ்டமும் மனக் கஷ்டமும் உண்டாகும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**செய்வன திருந்தச் செய்** 49

செய்வன - செய்யக் கூடிய காரியங்களை: திருந்த - திருத்தமாக: செய் - செய்வாயாக.

செய்யும் காரியங்களைச் செவ்வையாகச் செய்யவேண்டும்.

**சேரிடம் அறிந்து சேர்.** 50

சேர் இடம் - சேரக்கூடியவர்களைப் பார்த்து: அறிந்து - நன்கு ஆராய்ந்து: சேர் - சேர்ந்துகொள்.

சேரத்தக்கவர்களை நன்கு அறிந்துசேர வேண்டும்.

**சை எனத் திரியேல்** 51

சை என - "சீ" என பிறர் இகழும்படி: திரியேல் -அலையக்கூடாது.

மற்றவர் இகழும்படி நடந்துகொள்ளக் கூடாது.

**சொல் சோர்வு படேல்** 52

சொல் - ஒருவருடன் பேசும்பொழுது: சோர்வு படேல் - மனம் தளர்ந்து பேசக்கூடாது.

மற்றவருடன் பேசும்பொழுது மனம் தளர்ந்து பேசக்கூடாது.

**சோம்பித் திரியேல்.** 53

சோம் - சோம்பேறித்தனமாக: திரியேல் - திரியாதே.

முயற்சி இன்றி சோம்பேறித்தனமாக ஊர் சுற்றக் கூடாது.

**தக்கோன் எனத் திரி** 54

தக்கோன் என - தகுதியுடையவன் என்று எண்ணும்படி திரி - நடந்து கொள்.

கௌரவமானவன் என்று பிறர் கருதும்படி நடக்கவேண்டும்.

**தானமது விரும்பு** 55

தானம் அது - ஆதரவற்றவர்களுக்கு உதவி செய்வதை: விரும்பு - ஆசைகொள்.

ஆதரவற்றவர்களுக்கு உதவி செய்யவேண்டும்.

**திருமாலுக்கு அடிமைசெய்** 56

திருமாலுக்கு - மகாவிஷ்ணுவுக்கு: அடிமை செய் - சேவை செய்.

மகாவிஷ்ணுவுக்கு சேவை செய்தால் புண்ணியம் கிடைக்கும்.

**தீவினை அகற்று** 57

தீவினை - தீமையான செயல்களை: அகற்று - செய்யாதே.

பிறருக்குத் தீமை உண்டாகும் செயல்களைச் செய்யக்கூடாது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**துன்பத்திற்கு இடம் கொடேல்** 58

துன்பத்திற்கு - வருத்தத்துக்கு: இடம் கொடேல் - மனத்தில் இடம் கொடுக்காதே.

மனம் வருந்தும்படி நடந்துகொள்ளக்கூடாது.

**தூக்கி வினைசெய்** 59

தூக்கி - ஆராய்ந்து பார்த்து: வினை செய் - காரியத்தைச் செய்.

எந்தக் காரியத்தையும் நன்கு ஆராய்ந்து தெளிந்து செய்ய வேண்டும்.

**தெய்வம் இகழேல்** 60

தெய்வம் - கடவுளை: இகழேல் - இகழ்ந்து பேசாதே.

கடவுளை இகழ்ச்சியாகப் பேசக்கூடாது.

**தேசத்தோடு ஒத்து வாழ்** 61

தேசத்தோடு - தன் நாட்டோடு: ஒத்து வாழ். இணக்கமாக வாழ் வாயாக.

தன்நாட்டு மக்களோடு ஒற்றுமையாக இணைந்து வாழ வேண்டும்.

**தையல் சொல் கேளேல்** 62

தையல் - மனைவி: சொல் - இழிவான சொற்களை: கேளேல் - கேட்கக்கூடாது.

மனைவியின் இழிந்த சொற்களைக்கேட்டு அதன்படி நடக்கக்கூடாது.

**தொண்மை மறவேல்** 63

தொண்மை - பழமைக் காரியங்களை: மறவேல் - மறவாதே.

பழமையான காரியங்களை மறந்துவிடக் கூடாது.

**தோற்பன தொடரேல்** 64

தோற்பன - தோல்வி ஏற்படும் என நிச்சயமாகத் தெரிந்தால்: தொடரேல் - அதை மேற்கொள்ளக்கூடாது.

தோல்வி உண்டாகும் எனத்தெரிந்தும் அதில் ஈடுபடக்கூடாது.

**நன்மை கடைப்பிடி** 65

நன்மை - நல்ல காரியங்களை: கடைப்பிடி - கைக்கொள்.

நற்காரியங்களை உறுதியாகச் செய்துவர வேண்டும்.

**நாடு ஒப்பன செய்** 66

நாடு - நாட்டு மக்கள்: ஒப்பன - ஏற்றுக்கொள்ளும்படியான காரியங் களை: செய் - செய்வாயாக.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நாட்டு மக்கள் ஒப்புக்கொள்ளத்தக்க காரியங்களைச் செய்ய வேண்டும்.

**நிலையில் பிரியேல் 67**

நிலையில் - உயர்ந்த நிலையிலிருந்து: பிரியேல் - கீழான நிலைக்கு இறங்கிவிடாதே.

மதிப்போடு இருந்து விட்டு கேவலமாக நடந்து கொள்ளக்கூடாது.

**நீர் விளையாடேல் 68**

நீர் - தண்ணீர் பெருகிய இடத்திலே: விளையாடேல் - நீந்தி விளையாடாதே.

ஆபத்தான வெள்ளத்தில் நீந்தி விளையாடக்கூடாது.

**நுண்மை நுகரேல் 69**

நுண்மை - நோய் உண்டாக்கும் சிற்றுண்டிகளை: நுகரேல் - உண்ணாதே.

நோயைத் தரக்கூடிய ஆகாரங்களை உண்ணக்கூடாது.

**நூல் பல கல் 70**

நூல் - அறிவு நூல்களை: பல - நிறைய: கல் - கற்றுக்கொள்.

அறிவு வளர்ச்சிக்கான நூல்களை அதிகமாகப் படிக்கவேண்டும்.

**நெல் பயிர் விளை 71**

நெல் பயிர் - நெல் விளையத்தக்க பயிரை: விளை - உற்பத்தி செய்.

நெல் உற்பத்தியை அதிகரிக்கவேண்டும்.

**நேர்பட ஒழுகு 72**

நேர்பட - நேர்மையாக: ஒழுகு - நடந்து கொள்வாயாக.

நேர்மையான வழியில் நடந்துகொள்ளவேண்டும்.

**நைவினை நுணுகேல் 73**

நை - இகழ்வான: வினை - காரியங்களில்: நணுகேல் - ஈடுபடாதே.

இகழ்ச்சியான காரியங்களைச் செய்யக்கூடாது.

**நொய்ய உரையேல் 74**

நொய்ய - மனம் புண்படும் படியாக: உரையேல் - சொற்களை சொல்லக்கூடாது.

பிறர் மனம் புண்படும் படியான வார்த்தைகளைக் கூற வேண்டாம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**நோயக்கு இடம் கொடேல்** 75

நோய்க்கு - வியாதிக்கு: இடம் கொடேல் - உடலில் இடம் கொடுக்கக்கூடாது.

நோய் உடலில் அணுகாமல் பார்த்துக்கொள்ள வேண்டும்.

**பழிப்பன பகரேல்** 76

பழிப்பன - பழி சொல்லத்தக்க: பகரேல் - சொற்களைக் கூறாதே.

பிறர் பழிக்கும் படியான இழிவான சொற்களைக் கூறவேண்டாம்.

**பாம்பொடு பழகேல்** 77

பாம்பொடு - பாம்புடன்: பழகேல் - விளையாடாதே.

பாம்பொடு விளையாடுவது உயிருக்கு ஆபத்து.

**பிழைபடச் சொல்லேல்** 78

பிழைபட - தவறாக நினைக்கும்படி: சொல்லேல் - சொல்லாதே.

தவறான கருத்து ஏற்படும் சொற்களைச் சொல்ல வேண்டாம்.

**பீடு பெற நில்** 79

பீடு - பெருமை: பெற - அடையும்படி: நில் - "நிலையாக இரு".

பெருமைப்படத்தக்க முறையில் நடந்துகொள்ள வேண்டும்.

**புகழ்ந்தாரைப் போற்றி வாழ்.** 80

புகழ்ந்தாரை - புகழ்மிக்கவர்களை: போற்றி - மதித்து: வாழ் - வாழ்வாயாக.

புகழ்மிக்க பெரியவர்களை வணங்கி, அவர்களைப் பின்பற்றி வாழ வேண்டும்.

**பூமி திருத்தி உண்** 81

பூமி - விளைநிலத்தை: திருத்தி - உழுது பயிர்செய்து: உண் - உண்பாயாக.

நிலத்தைப் பயிர்செய்து, விளைந்த நெல்லைக் கொண்டு உண்ணவேண்டும்.

**பெரியாரைத் துணைக்கொள்** 82

பெரியாரை - அறிவு சான்ற ஒழுக்க சீலர்களை: துணைக் கொள் - துணையாகக் கொள்வாயாக.

அறிவு மிகுந்த ஒழுக்க சீலர்களை அணுகி, அவர்களின் அறிவுரைகளைக் கேட்டு நடக்க வேண்டும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**பேதைமை அகற்று** 83

பேதைமை - அறிவில்லாத் தன்மையை: அகற்று - நீக்கி விடு.
மூடத்தனமாக நடந்து கொள்ளக்கூடாது.

**பையலோடு இணங்கேல்** 84

பையலோடு - சிறுவனோடு: இணங்கேல் - சேராதே
அறிவற்ற சிறுவனோடு பழகக்கூடாது.

**பொருள்தனைப் போற்றி வாழ்** 85

பொருள்தனை - பொருள், செல்வம் ஆகிய வற்றை, போற்றி - பாதுகாத்து: வாழ் - வாழ்வாயாக.

பொருள்களையும் செல்வத்தையும் கவனமாகப் பாதுகாத்து வைத்துக்கொண்டு வாழவேண்டும்.

**போர்த்தொழில் புரியேல்** 86

போர்த் தொழில் - சண்டை, சச்சரவுகளில்: புரியல் - ஈடுபடாதே.
வீணாகச் சண்டை சச்சரவுகளில் தலையிடவேண்டாம்.

**மனம் தடுமாறேல்** 87

மனம் - உள்ளம்: தடுமாறேல் - கலங்காதே.
மனங்கலங்கி, செய்வது அறியாது தடுமாற வேண்டாம்.

**மாற்றானுக்கு இடம் கொடேல்** 88

மாற்றானுக்கு - எதிரிக்கு: இடம் கொடேல் - எதிலும் இடம் கொடுக்கக்கூடாது.

எதிரிக்குச் சிறிதளவேனும் இடம் அளிக்கக்கூடாது.

**மிகைபடச் சொல்லேல்** 89

மிகைபட - அளவுக்கு அதிகமாக: சொல்லேல் சொல்லாதே.
அளவுக்கு மீறிய சொற்களைச் சொல்லக்கூடாது.

**மீதூண் விரும்பேல்** 90

மீது - அதிகமான: ஊண் - உணவை: விரும்பேல் உண்ணாதே.
அளவுக்கு அதிகமான உணவை உண்ண வேண்டாம்.

**முனைமுகத்து நில்லேல்** 91

முனை முகத்து - போர் முனையிலே: நில்லேல் - ஆயுதம் இன்றி நிற்காதே.

போர்முனையில் ஆயுதம் இல்லாமல் நிற்கக்கூடாது.

**மூர்க்கரோடு இணங்கேல்** 92



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மூர்க்கரோடு - முரடர்களோடு: இணங்கேல் - இணையாதே.
அறிவு இல்லாத மூடர்களோடு சேரக்கூடாது.

**மெல்லி நல்லாள் தோள் சேர்** **93**

மெல் - மென்மையான: நல்லாள் - நற்குணம் பொருந்திய மனைவியோடு: தோள்சேர் - இணைந்து வாழ்வாயாக.
வீட்டிலே நல்ல மனைவியோடு இணைந்து வாழவேண்டும்.

**மேன் மக்கள் சொல் கேள்** **94**

மேன் மக்கள் - மேன்மைக் குணம் வாய்ந்தவர்களுடைய: சொல் - அறிவுரைகளை: கேள் - கேட்டு நடப்பாயாக.
உயர் குணமிக்க பெரியோர்களின் அறிவுரையைக் கேட்டு நடந்தால் நன்மை உண்டாகும்.

**மை விழியார் மனை அகல்** **95**

மை விழியார் - ஒழுக்கம் இல்லாத பெண்ணின்: மனை அகல் - வீட்டுக்குப் போகாதே.
மயக்கும் விலைமாதர் வீட்டுக்குப் போகவேண்டாம்.

**மொழிவது அற மொழி** **96**

மொழிவது - சொல்வதை: அற - சந்தேகம் இல்லாமல்: மொழி - சொல்வாயாக.
சொல்லக் கூடியதை சந்தேகமின்றித் தெளிவாகக் கூறவேண்டும்.

**மோகத்தை முனி** **97**

மோகத்தை - ஆசையை: முனி வெறுத்துத் தடை செய்வாயாக.
ஆசையை வெறுத்து அடக்கவேண்டும்.

**வல்லமை பேசேல்** **98**

வல்லமை - உன்னுடைய திறமையை: பேசேல் -புகழ்ந்து பேசாதே.
உன்னுடைய திறமையை நீயே புகழ்ந்து கொள்ளக்கூடாது.

**வாது முற்கூறேல்** **99**

வாது - விவாதம் செய்வதற்கு: முற்கூறேல் - வலியச் சென்று அழைக்காதே.
வலியச் சென்று யாரையும் விவாதங்களுக்குக் கூப்பிடக்கூடாது.

**வித்தை விரும்பு** **100**

வித்தை - கலைகளை: விரும்பு - விரும்பிக் கற்றுக்கொள்.
கல்வி முதலான கலைகளை ஆசையோடு கற்றுக்கொள்ள வேண்டும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**வீடு பெற நில்** **101**

வீடு - மோட்சத்தை: பெற - அடைவதற்கு: நில் - முயற்சி செய்.
முக்திக்கான வழியை அடைய முயற்சி செய்யவேண்டும்.

**உத்தமனாய் இரு** **102**

உத்தமனாய் - நல்ல குணம் பொருந்தியவனாக: **இரு** - வாழ்வாயாக.
நற்குணம் உள்ளவனாக வாழவேண்டும்.

**ஊருடன் கூடிவாழ்** **103**

ஊருடன் - ஊராருடன்: கூடி - ஒற்றுமையாக: வாழ் - வாழ்வாயாக.
ஊர்மக்களோடு ஒற்றுமையாக இணைந்து வாழவேண்டும்.

**வெட்டெனப் பேசேல்** **104**

வெட்டென - வெடுக்கென்று பேசேல் - பேசக்கூடாது.
யாரிடமும் கடுமையான சொற்களைக் கூறக்கூடாது.

**வேண்டி வினை செயேல்** **105**

வேண்டி - வேண்டும் என்றே: வினை செயேல் - **தீமையான** செயல்களைச் செய்யாதே.
வேண்டும் என்றே எவருக்கும் தீமை செய்யக்கூடாது.

**வைகறைத் துயில் எழு** **106**

வைகறை - விடியற் காலையில்: துயில் எழு - நித்திரையிலிருந்து விழிக்கவேண்டும்.
அதிகாலையில் விழித்து எழுவது சிறப்புடையதாகும்.

**ஒன்னாரைத் தேறேல்** **107**

ஒன்னாரை - எதிரிகளை: தேறேல் - நம்பக்கூடாது.
எதிரிகளிடம் நம்பிக்கை கொள்ளக்கூடாது.

**ஓரம் சொல்லேல்** **108**

ஓரம் - பட்சபாதமாக: சொல்லேல் - எதையும் சொல்லாதே.
ஒருதலைப்பட்சமாகக் கூறக்கூடாது.

*ஆத்திசூடி மூலம் – பதவுரை – கருத்துரை*
*முற்றும்*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கொன்றைவேந்தன்

## கடவுள் வாழ்த்து

**கொன்றை வேந்தன் செல்வன் அடியிணை**
**என்றும் ஏத்தித் தொழுவோம் யாமே.**

கொன்றை - கொன்றைப் பூ மாலையை அணிந்துள்ள: வேந்தன் - சிவபெருமானுக்கு: செல்வன் - செல்லப்பிள்ளையான விநாயகரின்: இணை அடி - இரண்டு பாதங்களையும்: யாம் - நாம்: என்றும் - எப்பொழுதும்: ஏத்தி - போற்றி: தொழுவோம் - வணங்குவோம்.

கொன்றைப் பூவை அணிந்துள்ள சிவபெரு மானுடைய செல்வப் புத்திரனான விநாயகப் பெருமானை எப்பொழுதும் துதித்துப் போற்றி வணங் குவோம்.

## நூல்

**அன்னையும் பிதாவும் முன்னறி தெய்வம்** 1

அன்னையும் - அம்மாவும்: பிதாவும் - அப்பாவும்: முன் அறி - கண்முன்னே காணப்படும். தெய்வம் - கடவுள்.
அம்மாவும் அப்பாவும் கண்கண்ட கடவுள்.

**ஆலயம் தொழுவது சாலவும் நன்று** 2

ஆலயம் தொழுவது - கோவிலுக்குப் போய் இறைவனை வணங்குவது: சாலவும் - மிகவும்: நன்று - நன்மை.

கோவிலுக்கு போய் இறைவனை வணங்குவது மிகவும் நன்மை தரும்.

**இல் அறம் அல்லது நல் அறம் அன்று** 3

இல் அறம் - மனைவியோடு சேர்ந்து வீட்டிலி ருந்து வாழ்வது: நல் அறம் - நல்ல வாழ்வு: அல்லது - அப்படி இல்லாவிடில்: நல் அறம் அன்று - நன்மை தரக்கூடிய நல்ல நெறியுடைய வாழ்க்கை ஆகாது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மனைவியோடு சேர்ந்து வாழ்வது நல்வாழ்வு, இல்லாவிடில் நல்வாழ்வு ஆகாது.

**ஈயார் தேட்டை தீயார் கொள்வர்** 4

ஈயார் - கொஞ்சங்கூட பிறருக்கு உதவாத கருமிகளின்: தேட்டை - தேடிய பொருளை: தீயார் - தீயோர்கள்: கொள்வர் - கொள்ளை அடித்துக் கொண்டு போய்விடுவார்கள்.

எவருக்கும் உதவாத கருமிகளின் பொருள்களை தீயவர்கள் கொள்ளை அடித்துக்கொண்டு போய் விடுவார்கள்.

**உண்டி சுருங்குதல் பெண்டிர்க்கு அழகு** 5

உண்டி - உணவு: சுருங்குதல் - குறைவாயிருந்தால்: பெண்டிர்க்கு - பெண்களுக்கு: அழகு - அழகாகும்.

குறைவாக உண்ணுதல் பெண்களுக்குக் கவர்ச்சி யாயிருக்கும்.

**ஊருடன் பகைக்கின் வேருடன் கெடும்** 6

ஊருடன் - ஊரோடு: பகைக்கின் - விரோதித்துக் கொண்டால்: வேருடன் - குடும்பத்தோடு: கெடும் - அழிந்துபோகும்.

ஊரோடு விரோதித்துக் கொண்டால் குடும்பத்தோடு அழிந்து விடுவார்.

**எண்ணும் எழுத்தும் கண் எனத்தகும்.** 7

எண்ணும் - கணக்கும்: எழுத்தும் - இலக்கியமும்: கண் என - இரு கண்களைப்போல்: தகும் - கூறத்தகும்.

கணக்கும் இலக்கியமும் கண்களைப் போலச் சிறப்பானவை.

**ஏவா மக்கள் மூவா மருந்து** 8

ஏவா - வேலை ஏவு முன்னே குறிப்பை உணரந்து செய்யும்: மக்கள் - பிள்ளைகள்: மூவா மருந்து - அமுதம் போன்றவர்கள்.

சொல்லும் முன்பே குறிப்பை உணர்ந்து செய்யும் மக்கள் அமுதத்துக்கு இணையானவர்கள்.

**ஐயம் புகினும் செய்வன செய்** 9



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஐயம் புகினும் - பிச்சை எடுக்க நேரிட்டபோதிலும்: செய்வன - செய்யக் கூடிய நல்ல காரியங்களை: செய் - செய்வாயாக.

வறுமையால் பிச்சை எடுக்க நேர்ந்த போதிலும் செய்யவேண்டிய நல்ல காரியத்தை செய்யாமல் விட்டுவிடக்கூடாது.

**ஒருவனைப் பற்றி ஓரகத்து இரு** **10**

ஒருவனைப் பற்றி - நல்லவன் ஒருவனை திருமணம் புரிந்துகொண்டு: ஓர் அகத்து - ஒரு வீட்டில்: இரு - வாழ்வாயாக.

ஒருவனை கணவனாகத் தேர்ந்தெடுத்து ஒரு வீட்டிலேயே அவனுடன் வாழவேண்டும்.

**ஓதலில் நன்றே வேதியர்க்கு ஒழுக்கம்** **11**

வேதியர்க்கு - பிராமணருக்கு: ஒழுக்கம் - உயர்வான நெறியானது: ஓதலில் - வேத பாராயணத்தை விட: நன்றே - நல்லது ஆகும்.

வேதத்தைப் படிப்பதைக் காட்டிலும் பிராமணருக்கு மிகவும் சிறப்பை அளிப்பது ஒழுக்க மேம்பாடே ஆகும்.

**ஔவியம் பேசுதல் ஆக்கத்திற்கு அழிவு** **12**

ஔவியம் பேசுதல் - பொறாமை எண்ணத்தோடு பேசுவது: ஆக்கத்திற்கு - செல்வத்துக்கு: அழிவு - தீமை உண்டாகும்.

பொறாமை எண்ணத்தோடு பேசுவது செல்வத்தை அழித்துவிடும்.

**அஃகமும் காசும் சிக்கெனத் தேடு** **13**

அஃகமும் - தானியமும்: காசும் - பணமும்: சிக்கென - செட்டோடு: தேடு - சம்பாதி.

சிக்கனமாக இருந்து தானியத்தையும் செல்வத்தையும் சம்பாதிக்க வேண்டும்.

**கற்பு எனப்படுவது சொல் திறம்பாமை** **14**

கற்பு எனப்படுவது - மகளிர் நிறை என்று கூறுவது சொல் திறம்பாமை - கணவன் சொல்லைத் தட்டாமல் நடப்பது ஆகும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கணவன் சொற்படி நடப்பதே பெண்களுக்கு நிறை ஆகும்.

**காவல் தானே பாவையர்க்கு அழகு** 15

காவல் தானே - தன்னைத்தானே காத்துக் கொள்வதுதான்: பாவையர்க்கு - பெண்களுக்கு: அழகு - சிறப்பாகும்.

ஒழுக்கத்தோடு தங்களைக் காத்துக் கொள்வதே பெண்களுக்கு உரிய சிறப்பாகும்.

**கிட்டாதாயின் வெட்டென மற.** 16

கிட்டாதாயின் - ஆசைப்பட்டது கிடைக்காவிட்டால்: வெட்டென - உடனே: மற - மறந்துவிடு.

ஆசைப்பட்டது கிடைக்காவிடில் அதை உடனே மறந்து விடுவது சிறப்பு.

**கீழோர் ஆயினும் தாழ உரை** 17

கீழோர் ஆயினும் - அடிமை வேலை செய்வோரானாலும் : தாழ உரை - அவர்களிடம் மரியாதையோடு சொல்லவேண்டும்.

அடிமை வேலை செய்யக்கூடியவர்களானாலும் கூட அவர்களிடம் மரியாதையோடு பேசிப் பழகுவது நன்மை தரும்.

**குற்றம் பார்க்கில் சுற்றம் இல்லை** 18

குற்றம் பார்க்கின் - குறைகளையே பெரிதாகப் பேசினால்: சுற்றம் இல்லை - உறவினர் எவரும் இருக்கமாட்டார்கள்.

குற்றம் குறைகளையே சொல்லிக்கொண்டிருந்தால் சுற்றத்தார் என யாருமே இருக்கமாட்டார்.

**கூர் அம்பு ஆயினும் வீரியம் பேசேல்** 19

கூர் அம்பு ஆயினும் - கூர்மையான ஆயுதம் இருந்தாலும் கூட: வீரியம் பேசேல் - கர்வத்தோடு வீரம் பேசாதே.

தன் கையில் மிக்க கூர்மையான ஆயுதம் வைத் திருந்தபோதிலும் கர்வத்தோடும் வீரம் பேசக் கூடாது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**கெடுவது செய்யின் விடுவது கருமம் 20**

கெடுவது செய்யின் - ஒருவர் கெடுதல் செய்தால் கூட: விடுவது - பதிலுக்குச் செய்யாமல் விட்டு விடுவது: கருமம் - சிறந்த செயலாகும்.

தீங்கு செய்தவருக்குப் பதிலுக்குத் தீங்கு செய்யாமல் மன்னித்து விடுவது சிறந்த செயலாகும்.

**கேட்டில் உறுதி கூட்டும் உடைமை 21**

கேட்டில் - வறுமை துன்புறுத்திய போதிலும்: உறுதிமன வலிமை யோடு இருத்தல்: உடைமை - செல்வத்தை: கூட்டும் - சேர்க்கும்.

வறுமையில் வாடினாலும் கூட மனம் தளராமல் இருப்பதே செல்வத் தைச் சேர்ப்பிக்கும்.

**கைப்பொருள் தன்னில் மெய்ப்பொருள் கல்வி 22**

கைப்பொருள் தன்னில் - கையிலுள்ள செல்வத்தைக் காட்டிலும்: மெய்ப்பொருள் - நிலையான உண்மைப் பொருள்: கல்வி - படிப்பே ஆகும்.

கைவசம் இருக்கும் செல்வத்தைக் காட்டிலும் கல்வியே நிரந்தரமான உண்மையான செல்வமாகும்.

**கொற்றவன் அறிதல் உற்ற இடத்து உதவி 23**

கொற்றவன் - ஆட்சி புரிபவர்: அறிதல் - தெரிந்துகொள்ள வேண்டி யது என்ன எனில்: உற்ற இடத்து - மக்களுக்குத் துன்பம் நேரிட்ட இடத்துக்கு உடனே சென்று: உதவி - தகுந்த உதவி புரிவதே.

மக்களுக்கு ஆபத்து உண்டானபோது, அதை உடனே அறிந்து, தகுந்த உதவி செய்வதே ஆட்சி செய்வோர் கடமை ஆகும்.

**கோள் செவிக் குறளை காற்றுடன் நெருப்பு 24**

கோள் செவி - கோள் கேட்க விரும்பும் காதிலே: குறளை - கோள் மூட்டி விட்டால்: காற்றுடன் நெருப்பு - காற்றும் நெருப்பும் கலந்தது போலாகும்.

கோள் கூறுவதை விரும்பிக் கேட்பவர் காதிலே மேலும் கோள் மூட்டி விட்டால் காற்றும் நெருப்பும் பற்றி எரிவது போலாகும்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**கௌவை சொல்லின் எவ்வருக்கும் பகை** 25

கௌவை - பழிச் சொற்களை: சொல்லின் - கூறினால்: எவ்வருக்கும் - பகை - எல்லோருக்குமே அவன் பகைவன் ஆவான்.

பிறர் மீது பழிச்சொற்களைக் கூறுவதனால் எல்லோரிடமும் விரோதம் ஏற்படும்.

**சந்ததிக்கு அழகு வந்தி செய்யாமை** 26

சந்ததிக்கு அழகு - வம்சம் தழைப்பதற்குச் சிறப்பு என்னவென்றால்: வந்தி செய்யாமை - மலடாக வாழாமல் இருப்பதே ஆகும்.

பரம்பரை விளங்குவதற்கு மக்கட் செல்வத்தோடு வாழவேண்டும்.

**சான்றோர் என்கை ஈன்றோர்க்கு அழகு** 27

ஈன்றோற்கு - பெற்ற தாய்க்கு: அழகு - சிறப்பைத் தருவது எது எனில்: சான்றோர் என்கை - தான் பெற்ற பிள்ளைகளை உலகோர் அறிஞர் என்று போற்றுவதே ஆகும்.

தன்னுடைய பிள்ளைகளை உலகத்தார் அறிஞர் என்று போற்றுவதே தாய்க்குச் சிறப்பாகும்.

**சிவத்தைப் பேணில் தவத்திற்கு அழகு** 28

சிவத்தை - சிவபெருமானை: பேணில் - துதி செய்து வணங்கினால்: தவத்திற்கு அழகு - தவம் செய்வோருக்கு அதுவே சிறப்பாகும்.

தவம் செய்வோருக்குச் சிறப்பு சிவபெருமானை துதித்து வழிபாடு செய்வதே.

**சீரைத் தேடின் ஏரைத்தேடு** 29

சீரை - சிறப்பான வாழ்வை: தேடின் - விரும்பினால்: ஏரைத்தேடு - உழவுத் தொழிலைக் கைக்கொள்வதே.

சிறப்பாக வாழ ஆசைப்பட்டால் உழவுத் தொழிலைக் கைக்கொள்ள வேண்டும்.

**சுற்றத்திற்கு அழகு சூழ இருத்தல்.** 30

சுற்றத்திற்கு அழகு - சுற்றத்தாருக்குச் சிறப்பு: சூழ இருத்தல் -



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நன்மை தீமையில் சூழ்ந்து இருப்பதே.

நன்மையிலும் தீமையிலும் விலகாமல் இருப்பதே உறவினர்களுக்குச் சிறப்பு ஆகும்.

**சூதும் வாதும் வேதனை செய்யும். 31**

சூதும் - சூதாடுதலும்: வாதும் - தர்க்க வாதம் செய்தலும்: வேதனை செய்யும் - துன்பத்தை உண்டாக்கும்.

குதிரைப் பந்தயம், சீட்டாட்டம், சொக்கட்டான் போன்ற சூதாட்டங் களும் தர்க்கப் பேச்சுக்களும் துன்பத்தை அளிக்கும்.

**செய்தவம் மறந்தால் கைத்தவம் ஆளும் 32**

செய்தவம் - தவம் புரிவதை: மறந்தால் - மறந்துவிட்டால்: கைதவம் - அஞ்ஞானம்: ஆளும் - அவனை ஆட்சி செலுத்தும்.

தான் செய்யக்கூடிய தவத்தை எவன் மறந்து விடுகின்றானோ அவனை அறியாமை ஆட்சி செலுத்தும்.

**சேமம் புகினும் யாமத்து உறங்கு 33**

சேமம் - காவல் காப்பதற்கு: புகினும் - போனாலும்: யாமத்து - நள்ளிரவில்: உறங்கு - தூங்குவாயாக.

காவல் காப்பதற்குச் சென்ற போதிலும் நள்ளிரவில் சிறிது நேரமாயினும் தூங்குவாயாக.

**சை ஒத்து இருந்தால் ஐயம் இட்டு உண் 34**

சை ஒத்து இருந்தால் - உதவி புரிய பொருள் இருக்குமானால்: ஐயம் இட்டு உண் - பிறருக்கு உணவு அளித்து விட்டு உண்பாயாக.

செல்வம் இருக்குமானால் பிறருக்கு உணவு அளித்துவிட்டு உண்ண வேண்டும்.

**சொக்கர் என்பவர் அத்தம் பெறுவர் 35**

சொக்கர் என்பவர் - தூய்மையான உள்ளமும் பொருள் வசதியும் உடையவரானால்: அத்தம் பெறுவர் - வாழ்வில் சகல இன்பங்களும் அடைவர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தூய்மையான உள்ளமும், பொருளும் உள்ளவரானால், வாழ்வில் முழு இன்பமும் அடைவர்.

**சோம்பர் என்பவர் தேம்பித் திரிவர்** 36

சோம்பர் என்பவர் - முயற்சி செய்து உழைக்காதவர்: தேம்பித் திரிவர் - வறுமையால் துன்புற்று உழல்வார்.

முயற்சி செய்து உழைக்காதவர் வறுமையால் துன்புற்றுத் திரிவார்.

**தந்தை சொல்மிக்க மந்திரம் இல்லை** 37

தந்தை - தன்னைப்பெற்ற தகப்பனாரின்: சொல் - அறிவுரைக்கு: மிக்க - மேலான: மந்திரம் இல்லை - சாஸ்திரம் இல்லை.

தகப்பனார் கூறும் அறிவுரைக்கு மிஞ்சிய சாஸ்திரம் வேறு இல்லை.

**தாயிற் சிறந்த ஒரு கோயிலும் இல்லை** 38

தாயிற் சிறந்து - பெற்ற தாயைக் காட்டிலும் மேன்மையாக: ஒரு கோயிலும் இல்லை - ஆலயம் வேறு எதுவும் இல்லை.

தாயையே வணங்க வேண்டும்: அதற்கு மேலான கோயில் எதுவுமே இல்லை.

**திரை கடல் ஓடியும் திரவியம் தேடு** 39

திரை கடல் - அலை மோதும் கடலுக்கு அப்பால்: ஓடியும் - எப்படியும் போய்: திரவியம் தேடு - பொருள் சம்பாதிப்பாயாக.

அலை கடலுக்கு அப்பால் சென்றாவது பொருள் தேடவேண்டும்.

**தீராக் கோபம் போராய் முடியும்** 40

தீராக் கோபம் - அடக்க முடியாத கோபம்: போராய் முடியும் - கலகமாக முடிந்துவிடும்.

அடங்காத சினம் பெரிய சண்டையில் கொண்டு விடும்.

**துடியாப் பெண்டிர் மடியில் நெருப்பு** 41

துடியாப் பெண்டிர் - கணவனுக்குத் துன்பம் உற்ற பொழுது மனம் பதறாத மனைவியர்: மடியில் நெருப்பு - வயிற்றில் கட்டி வைத்துள்ள தீயைப் போன்றவர்கள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கணவனுக்கு எதிர்பாராத துன்பம் நேரிட்டபொழுது துடிதுடிக்காத மனைவியானவள் வயிற்றில் கட்டிவைத்துள்ள நெருப்புப்போன்றவள்.

**தூற்றும் பெண்டிர் கூற்று எனத்தகும் 42**

தூற்றும் பெண்டிர் - அவதூறுகளையே பேசித்திரியும் பெண்ணானவள்: கூற்று எனத்தகும் - குடும்பத்துக்கு எமனைப் போன்றவள் ஆவாள்.

அவதூறுகளையே பேசித்திரியும் பெண், எமன் என்று சொல்லக் கூடியவள் ஆவாள்.

**தெய்வம் சீறின் கைதவம் மாளும் 43**

தெய்வம் சீறின் - கடவுளுடைய கோபம் ஏற்படுமேயானால்: கைதவம் மாளும் - கைவரப்பெற்ற தவம் அழிந்து விடும்.

கடவுளின் கோபத்துக்கு ஆளானால் கைவரப்பெற்ற தவம் அழிந்து போகும்.

**தேடாது அழிக்கின் பாடாய் முடியும் 44**

தேடாது - முயற்சி செய்து சம்பாதிக்காமல்: அழிக்கின் - கையிலுள்ள பொருளைச் செலவ ழித்துக் கொண்டிருந்தால்: பாடாய் முடியும் - பெருந் துன்பமாக ஆகிவிடும்.

முயன்று பொருளைச் சம்பாதிக்காமல் இருக்கின் றவற்றையே செலவு செய்து கொண்டிருந்தால் முடிவில் துன்பம் உண்டாகும்.

**தையும் மாசியும் வையகத்து உறங்கு 45**

தையும் மாசியும் - தை, மாசி மாதங்களில்: வையகத்து - வைக்கோல் வேய்ந்து வீட்டில்: தூங்குவாயாக.

தை, மாசி மாதங்களில் வைக்கோல் வேய்ந்த வீட்டில் உறங்கினால் கால நிலைக்குத் தகுந்தபடி சுகமாக இருக்கும்.

**தொழுது ஊண் சுவையின் உழுது ஊண் இனிது 46**

தொழுது - வணங்கி வேலைபார்த்து: ஊண் சுவையின் - கிடைக்கும் வருவாயில் உண்டு வாழ்வதைவிட: உழுது ஊண் இனிது - நிலத்தை வேளாண்மை செய்து உண்பதே சுவையாகும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வணங்கி வேலை பார்த்து வயிறு வளர்ப்பதைவிட வேளாண்மை செய்து உண்பதே சிறப்புடையதாகும்.

**தோழனோடும் ஏழைமை பேசேல்** **47**

தோழனோடும் - நெருங்கிய நண்பனிடத்திலும்: ஏழைமை - வறுமை நிலைபற்றி: பேசேல் - பேசக்கூடாது.

நெருங்கிய நண்பனிடத்திலும் கூட வறுமை நிலையைச் சொன்னால் மிகவும் கேவலமாக நினைப்பான்.

**நல் இணக்கம் அல்லது அல்லல் படுத்தும்** **48**

நல் இணக்கம் அல்லது - பண்புமிக்க நல்லவர்கள் தொடர்பு இல்லையானால்: அல்லல்படுத்தும் - சங்கடத்தை உண்டாக்கும்.

நல்லவர்கள் தொடர்பு நன்மையாகும்: கெட்டவர்கள் தொடர்பு தீமையாகும்.

**நாடு எங்கும் வாழக்கேடு ஒன்றும் இல்லை** **49**

நாடு எங்கும் - நாடு முழுவதும்: வாழ - செழித்து வாழ்ந்தால்: கேடு ஒன்றும் இல்லை - தீங்கு எதுவும் இருக்காது.

தேசம் பூராவும் செழித்துத் தழைத்தால் துன்பமே இல்லை.

**நிற்கக் கற்றல் சொல் திறம்பாவை** **50**

நிற்கக் கற்றல் - நிலைத்து நிற்கும் கல்வி கற்பதானது: சொல் திறம்பாவை - சொன்ன சொல்லைக் காப்பாற்றுதல்.

நிலையான கல்வி கற்றவர் என்பவர் வாக்குறுதி உள்ளவரே ஆவர்.

**நீர் அகம் பொருந்திய ஊர் அகத்திரு** **51**

நீர் அகம் - தண்ணீர் தன்னகத்தே: பொருந்திய - அமைந்துள்ள: ஊர் அகத்திரு - ஊரிலே வசிப்பாயாக.

தண்ணீர்வசதி நிறைந்த ஊரிலே வாழ்வாயாக.

**நுண்ணிய கருமமும் எண்ணித் துணி** **52**

நுண்ணிய - மிகச் சிறிய: கருமமும் - செயலானாலும் எண்ணி -



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வணங்கி வேலை பார்த்து வயிறு வளர்ப்பதைவிட வேளாண்மை செய்து உண்பதே சிறப்புடையதாகும்.

**தோழனோடும் ஏழைமை பேசேல் 47**

தோழனோடும் - நெருங்கிய நண்பனிடத்திலும்: ஏழைமை - வறுமை நிலைபற்றி: பேசேல் - பேசக்கூடாது.

நெருங்கிய நண்பனிடத்திலும் கூட வறுமை நிலையைச் சொன்னால் மிகவும் கேவலமாக நினைப்பான்.

**நல் இணக்கம் அல்லது அல்லல் படுத்தும் 48**

நல் இணக்கம் அல்லது - பண்புமிக்க நல்லவர்கள் தொடர்பு இல்லையானால்: அல்லல்படுத்தும் - சங்கடத்தை உண்டாக்கும்.

நல்லவர்கள் தொடர்பு நன்மையாகும்: கெட்டவர்கள் தொடர்பு தீமையாகும்.

**நாடு எங்கும் வாழக்கேடு ஒன்றும் இல்லை 49**

நாடு எங்கும் - நாடு முழுவதும்: வாழ - செழித்து வாழ்ந்தால்: கேடு ஒன்றும் இல்லை - தீங்கு எதுவும் இருக்காது.

தேசம் பூராவும் செழித்துத் தழைத்தால் துன்பமே இல்லை.

**நிற்கக் கற்றல் சொல் திறம்பாவை 50**

நிற்கக் கற்றல் - நிலைத்து நிற்கும் கல்வி கற்பதானது: சொல் திறம்பாவை - சொன்ன சொல்லைக் காப்பாற்றுதல்.

நிலையான கல்வி கற்றவர் என்பவர் வாக்குறுதி உள்ளவரே ஆவர்.

**நீர் அகம் பொருந்திய ஊர் அகத்திரு 51**

நீர் அகம் - தண்ணீர் தன்னகத்தே: பொருந்திய - அமைந்துள்ள: ஊர் அகத்திரு - ஊரிலே வசிப்பாயாக.

தண்ணீர்வசதி நிறைந்த ஊரிலே வாழ்வாயாக.

**நுண்ணிய கருமமும் எண்ணித் துணி 52**

நுண்ணிய - மிகச் சிறிய: கருமமும் - செயலானாலும் எண்ணி -


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நன்கு யோசித்து: துணி - செய்ய முற்படு.

மிகச் சிறிய செயலானாலும் கூட தீர யோசித்தே செய்யவேண்டும்.

**நூன்முறை தெரிந்து சீலத்து ஒழுகு** 53

நூன் முறை தெரிந்து - அறநூல்களிலே கூறியுள்ள நீதிகளை உணர்ந்து: சீலத்து ஒழுகு - ஒழுக்கத்தோடு நடந்துகொள்.

அற நூல்களின் நீதிமுறைகளைத் தெரிந்து ஒழுக்கத்தோடு வாழ வேண்டும்.

**நெஞ்சை ஒளித்து ஒரு வஞ்சகம் இல்லை** 54

நெஞ்சை ஒளித்து - மனதுக்குத் தெரியாத: ஒரு வஞ்சகம் இல்லை ஏமாற்றத்தக்க காரியம் ஏதும் இல்லை.

மனதுக்குத் தெரியாமல் ஏமாற்றமான காரியம் ஏதும் இல்லை.

**நேரா நோன்பு சீர் ஆகாது** 55

நேரா நோன்பு - மனம் இணக்கத்தோடு செய்யாத: நோன்பு சீர் ஆகாது - விரதமானது சிறப்பாகாது.

மனம் இணங்கிச் செய்யாத நோன்பு சிறப்பு அளிக்காது.

**நைபவர் எனினும் நொய்ய உரையேல்** 56

நைபவர் எனினும் - வலிமையற்றவர் ஆனாலும்: நொய்ய உரையேல் - மனம் நோகும்படியான சொற்களைக் கூறாதே.

எளியவர் ஆனாலும் மனம் நோகும்படியான சொற்களைக் கூறவேண்டாம்.

**நொய்யவர் என்பவர் வெய்யவர் ஆவர்** 57

நொய்யவர் என்பவர் - எளியவர் என்று நினைக்கப்படுவோரும்: வெய்யவர் ஆவார் - ஒரு சந்தர்ப்பத்தில் பெரியவராகிவிடுவார்.

தோற்றத்தில் எளிமையாகத் தெரிந்தாலும் செயல் மூலம் பெரியவராகத் திகழ்ந்துவிடுவார்.

**நோன்பு என்பது கொன்று தின்னாமை** 58



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நோன்பு என்பது - விரதம் எனப்படுவது: கொன்று தின்னாமை - உயிரைக் கொன்று அதன் புலாலை உண்ணாமல் இருப்பதே ஆகும்.

மற்ற உயிர்களைக்கொன்று உண்ணாமல் இருப்பதே விரதம் ஆகும்.

**பண்ணிய பயிரில் புண்ணியம் தெரியும் 59**

பண்ணிய பயிரில் - பயிர் செய்த விளைச்சலில்: புண்ணியம் தெரியும் - நற்பயன் தெரிந்துவிடும்.

வேளாண்மை செய்துள்ள விளைச்சலைக் காணும்போது அவருடைய நல்வினைப் பயன் தெரிந்துவிடும்.

**பாலோடு ஆயினும் காலம் அறிந்து உண் 60**

பாலோடு ஆயினும் - பாலுடன் செய்த பதார்த்தமானாலும் கூட: காலம் அறிந்து உண் - நேரத்தோடு உண்ண வேண்டும்.

பாலினால் தயாரித்த உணவுப் பொருளானாலும் நேரம் தவறி சாப்பிடக் கூடாது.

**பிறன் மனை புகாமை அறம் எனத்தகும் 61**

பிறன்மனை - காம இச்சையால் மற்றவர் வீட்டுக்கு: புகாமை - போகாமல் இருப்பது: அறம் எனத்தகும் - ஒழுக்கநெறி ஆகும்.

பிறர் மனைவியிடம் இச்சை வைத்து அங்கே போகாமல் இருப்பதே சிறந்த ஒழுக்க நெறி ஆகும்.

**பீரம் பேணில் பாரம் தாங்கும் 62**

பீரம் பேணில் - தாய்ப்பாலை ஊட்டி நன்றாக வளர்த்தால்: பாரம் தாங்கும் - எதிர்காலத்தில் வலிமை மிக்கவனாக வாழ இயலும்.

தன் தாய்ப் பாலைக் குடித்து வளர்ந்த குழந்தை, வலிமையோடு பொறுப்பான காரியத்தை நிறைவேற்றும்.

**புலையும் கொலையும் களவும் தவிர் 63**

புலையும் - புலால் உண்பதையும்: கொலையும் - கொலை செய்வதையும்: களவும் - திருடுவதையும்: தவிர் - தவிர்ப்பாயாக.

புலால் உணவு, உயிர்க்கொலை, திருட்டுத் தொழில் இவற்றை ஒழித்து விடுவாயாக.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**பூரியோர்க்கு இல்லை சீரிய ஒழுக்கம் 64**

பூரியோர்க்கு - கீழ்த்தரமானவர்களிடம்: இல்லை - இருப்பதில்லை: சீரிய ஒழுக்கம் - சிறப்புமிக்க பண்பு

கீழ்த்தரமானவர்களிடம் சிறப்பு மிக்க பண்பு இருக்காது.

**பெற்றோர்க்கு இல்லை சுற்றமும் சினமும் 65**

சுற்றமும் சினமும் - சுற்றத்தார் என்னும் பாசமும் கோபமும் பெற்றோர்க்கு இல்லை - ஞானம் கைவரப் பெற்றவர்களுக்கு இல்லை.

உண்மையான ஞானிகளுக்கு உறவு என்னும் ஆசை கோபம் எதுவும் இருப்பதில்லை.

**பேதமை என்பது மாதர்க்கு அணிகலம் 66**

பேதைமை என்பது - அறியாமை என்பது: மாதர்க்கு அணிகலம் - பெண்களுக்கு ஆபரணத்தைப் போன்றது.

தெரியாதவர்போல் அமைதியாயிருப்பது பெண்களுக்கு ஆபரணத்தைப் போன்ற பண்பாகும்.

**பையச் சென்றால் வையம் தாங்கும் 67**

பையச் சென்றால் - எந்தச் செயலிலும் நிதானமாகச் சென்றால்: வையம் தாங்கும் - உலகையே ஆளக்கூடிய வெற்றி கிடைக்கும்.

மெதுவாகச் செய்யக்கூடிய செயல் வெற்றி அளிக்கும்.

**பொல்லாங்கு என்பது எல்லாம் தவிர் 68**

பொல்லாங்கு என்பது - தீயவை என்று கருதப்படும்: எல்லாம் தவிர்- எல்லாவற்றையும் நீக்கிவிடுவாயாக.

தீமையான செயல்கள் எல்லாவற்றையும் அகற்றி விட வேண்டும்.

**போனகம் என்பது தான் உழுந்து உண்டல் 69**

போனகம் என்பது - உணவு என்பது: தான் உழுந்து - தன்னுடைய உழைப்பால் கிடைத்ததை: உண்டல் - சாப்பிடுவதாகும்.

தன்னுடைய சுய முயற்சியால் தேடி உண்பதே சிறப்புடையது.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**மருந்தே ஆயினும் விருந்தோடு உண்** 70

மருந்தே ஆயினும் - கிடைப்பதற்கு அரிய அமிர்தமே கிடைத்த போதிலும் கூட: விருந்தோடு உண் - விருந்தினர்களோடு பகிர்ந்து உண்பாயாக.

அமிர்தமே கிடைத்தாலும் விருந்தினருடன் சாப்பிடுவது சிறப்பு.

**மாரி அல்லது காரியம் இல்லை** 71

மாரி அல்லது - காலத்தில் மழை பொழியாவிடில்: காரியம் இல்லை - நாட்டில் எந்தக்காரியமும் நடப்பது இல்லை.

உலகில் எல்லாக் காரியங்களுக்கும் மழையே முக்கியமானது.

**மின்னுக்கெல்லாம் பின்னுக்கு மழை** 72

மின்னுக்கு எல்லாம் - வானத்தில் மின்னல் தோன்றினால்: பின்னுக்கு மழை - அடுத்த மழைவரும் என்பதற்கு அடையாளம்.

மின்னல் தோன்றினால் மழை வரும் என்பதற்கு அடையாளம்.

**மீகாமன் இல்லா மரக்கலம் ஓடாது** 73

மீகாமன் இல்லா - மாலுமி இல்லாமல்: மரக்கலம் ஓடாது - பாய்மரக் கப்பல் ஓடாது.

மாலுமி இல்லாமல் மரக்கப்பல் ஓடாது.

**முற்பகல் செய்யின் பிற்பகல் விளையும்** 74

முற்பகல் செய்யின் - வாழ்வின் முற்பகுதியில் யாருக்காவது தீங்கு செய்தால்: பிற்பகல் விளையும் - பிற்பகுதியில் தனக்கு அத்தகைய தீங்கு நேரிடும்.

முன் பகுதியில் யாருக்கேனும் தீங்கு செய்திடில் பிற்பகுதியில் தனக்கே தீங்கு நேரிடும்.

**மூத்தோர் சொல் வார்த்தை அமிர்தம்** 75

மூத்தோர் சொல் - அறிவும் அனுபவமும் முதிர்ந் தோர் கூறக்கூடிய: வார்த்தை அமிர்தம் - அனுபவ மொழிகள் அமிர்தத்தைப் போன்றவை ஆகும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அறிவு சான்ற பெரியோர்கள் சொல்லும் அனுபவ மொழிகள் அமிர்தம் போன்றவை ஆகும்.

**மெத்தையில் படுத்தல் நித்திரைக்கு அழகு 76**

நித்திரைக்கு அழகு - நல்ல தூக்கத்திற்குச் சிறப்பானது மெத்தையில் படுத்தல். - இலவம் பஞ்சினால் ஆன மெத்தையில் படுத்து உறங்குதல்.

மெத்தையில் படுத்துத் தூங்கினால் நல்ல தூக்கம் வரும்.

**மேழிச் செல்வம் கோழை படாது 77**

மேழிச் செல்வம் - உழுது பயிரிட்டுப் பெற்ற வேளாண்மைச் செல்வம்: கோழை படாது - ஒரு போதும் பழுது ஆகாது.

வேளாண்மையால்வந்த செல்வம் பழுதற்ற தாகும்.

**மை விழியார் தம் மனை அகன்று ஒழுகு 78**

மைவிழியார் தம் - மைதீட்டிய கண்ணால் உருட்டி மயக்கும் பரத்தையரின்: மனை அகன்று ஒழுகு - வீட்டின் அருகில்கூட செல்லாமல் இருப்பாயாக.

கண்ணால் மயங்கும் பொதுமகளிரின் வீட்டின் பக்கத்திலேகூட போகாமல் இருப்பது நன்மை யாகும்.

**மொழிவது மறுக்கின் அழிவது கருமம் 79**

மொழிவது - அனுபவம் உள்ளோர் கூறுவதை: மறுக்கின்... கேட்காமல் நடந்தால்: அழிவது கருமம் - காரியம் கெட்டுப்போகும்.

அனுபவம் உள்ளவர் கூறுவதை மீறிச்செய்யும் காரியம் கெட்டுப் போகும்.

**மோனம் என்பது ஞான வரம்பு 80**

மோனம் என்பது - பேசாமல் இருப்பது என்ப தானது: ஞான வரம்பு - மெய்ஞானத்தின் எல்லையை அடைந்ததாகும்.

மௌனநிலை (பேசாமல் இருந்து தியானித்தல் ஞானத்தில் தெளிவைக் கூறும்.)

**வளவன் ஆயினும் அளவு அறிந்து அழித்து உண் 81**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வளவன் ஆயினும் - சோழமன்னனைப் போல் செல்வச் சிறப்புடைய வனாக இருந்த போதிலும்: அளவு அறிந்து - தனக்கு வருகின்ற வருமானத்தை அறிந்து: அழித்து உண் - செலவிட்டு உண்.

சோழ மன்னனுக்கு இணையான செல்வம் இருப்பினும் வரவுக்கு ஏற்ற செலவு செய்தல் வேண்டும்.

**வானம் சுருங்கில் தானம் சுருங்கும்** 82

வானம் சுருங்கில் - மழை குறைவாகப் பெய்யுமானால்: தானம் சுருங்கும் - தருமத்திற்கான நன்கொடைகள் யாவும் சுருங்கிவிடும்.

மழையின் அளவு குறைந்து விடுமேயானால் தானங்களுகம் குறைவாகிவிடும்.

**விருந்து இல்லோர்க்கு இல்லை பொருந்திய ஒழுக்கம்** 83

விருந்து இல்லோர்க்கு - விருந்தினரை உபசரிக்கும் பண்பு இல்லாத வர்க்கு: இல்லை பொருந்திய ஒழுக்கம் - இல்லறத்தின் சிறந்த தர்மம் இல்லை.

விருந்தினரை உபசரிக்கும் பண்பு இல்லாதவர்களிடம் இல்லற தர்மம் நிறைவு பெறாது.

**வீரன் கேண்மை கூர் அம்பாகும்** 84

வீரன் கேண்மை - வீரனுடைய நட்பானது: கூர் அம்பாகும் - கூர்மையான அம்பு போல் உதவக் கூடியது.

வீரனுடைய நட்பானது, தன் கையிலே கூர்மையான அம்பு இருப்பதைப் போலாகும்.

**உரவோர் என்கை இரவாது இருத்தல்** 85

உரவோர் என்கை - அறிஞர் என்று கூறப்படு வோர் இரவாது இருத்தல் - பிறரிடம் போய் யாசிக்கக் கூடாது.

அறிஞர் எனக் கூறப்படுவோர் எவரிடமும் சென்று யாசியாமல் இருப்பதே சிறப்பு.

**ஊக்கம் உடைமை ஆக்கத்துக்கு அழகு** 86

ஊக்கம் உடைமை - உள்ளக்கிளர்ச்சியோடு இருத்தல்: ஆக்கத் திற்கு அழகு - செல்வச் செழிப்புக்கு சிறப்பாகும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மனம் தளராமல் உறுதியோடு இருப்பது செழிப்புக்கு உயர்வாகும்.

**வெள்ளைக்கு இல்லை கள்ளச் சிந்தை 87**

வெள்ளைக்கு - தூய்மையான உள்ளத்தவர்க்கு: கள்ளச்சிந்தை - வஞ்சக நினைப்பு: இல்லை - ஏற்படாது.

தூய்மையான மனத்தவர்க்கு வஞ்சக நினைப்பு எழாது.

**வேந்தன் சீரின் ஆம் துணை இல்லை 88**

வேந்தன் சீரின் - மன்னனுடைய கோபத்துக்கு ஆளானால்; ஆம் துண்ண - அவருக்குத் துணையாக வரக்கூடியவர்: இல்லை - ஒருவரும் இருக்கமாட்டார்.

மன்னனின் கோபத்துக்கு ஆளானவனுக்கு யாருமே துணையாக வரமாட்டார்.

**வைகல் தோறும் தெய்வம் தொழு 89**

வைகல் தோறும் - நாள் தோறும்: தெய்வம் தொழு - கடவுளை வணங்குதல் வேண்டும்.

நாள் தோறும் கடவுளை வணங்குதல் நன்மை தரும்.

**ஒத்த இடத்து நித்திரை கொள் 90**

ஒத்த இடத்து - சமமான தளத்தில்: நித்திரைகொள் - படுத்துத் தூங்குவாயாக.

சமமான தரையில் படுத்துத் தூங்குவது நல்லது.

**ஓதாதவர்க்கு இல்லை உணர்வோடு ஒழுக்கம் 91**

ஓதாதவர்க்கு - அறநூல்களைப் படிக்காதவர்களுக்கு: உணர்வோடு - தெளிவோடு கூடிய: ஒழுக்கம் பண்பு: இல்லை - இருக்காது.

நீதி நூல்களைப் படிக்காதவர்களுக்கு நல்லொழுக்க அறிவு இருக்காது.

*கொன்றை வேந்தன் மூலமும் உரையும்*
*முற்றும்.*




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உலகின் ஏழு அதிசயங்கள்

2007 ஆம் ஆண்டில் NEW OPEN WORLD CORPORATION ஆல் நடத்தப்பட்ட வாக்களிப்பின் அடிப்படையில் தெரிவுசெய்யப்பட்ட ஏழு நவீன அதிசயங்கள்.

1.தாஜ்மஹால் (இந்தியா)



6.பெரு நாட்டில் அண்டீஸ் மலையில் உள்ள இன்கா நகர்ச் சிதைவுகள்




2.சீனப்பெருஞ்சுவர் (சீனா)



5.ரியோ டீ ஜெனரியோ நகரத்தில் உள்ள கிறிஸ்துவின் சிலை 30 M உயரம்



3.ரோம் நகரத்து விளையாட் டரங்கம்



4.ஜோர்தான் நாட்டின் பீற்றா என்ற இடத்தில் உள்ள மென் சிவப்பு சிதைகள்



7.மெக்சிக்கோவின் சிச்சென் இற்சாவின் மாயான் நகரம் (மாயன் பண்பாட்டு அமைப்புக்கள்)



ஸ்ரீவிஜயகாந் பத்மலோஜினி
யா/சாவகச்சேரி இந்துக் கல்லூரி.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நன்றி நவிலல்



எங்கள் குடும்பத்தலைவி இயற்கையெய்திய வேளையில் எமது துயரில் கலந்து கொண்டோருக்கும் ,இறுதிக்கிரியைகள் வரை எம்முடன் கூடியிருந்து உதவி ஒத்தாசைகள் புரிந்தவர்களுக்கும் ,தேநீர் உபசரணை செய்தவர்களுக்கும், அஞ்சலிப்பிரசுரங்கள், பதாதைகள், மலர்வளையங்கள் தந்தவர்களுக்கும், சமூக அமைப்புகளுக்கும், நிறுவனங்களுக்கும இரங்கல் உரை நிகழ்த்தியோருக்கும் இறுதி ஊர்வலத்திலும் தகனக்கிரிலயகளிலும் ஏனைய தொடர் கிரியைகளிலும் கலந்து பங்களித்தவர்களுக்கும் அமரத்துவம் அடைந்ததிலிருந்து நேற்றைய தினம் வரை காலை, பகல், இரவு வரை உணவு மற்றும் சிற்றுண்டிகள் வழங்கியவர்களுக்கும், உலர் உணவுப் பண்டங்கள் உபகரித்தோருக்கும், நேரிலும் தொலைத்தொடர்பு மூலமும் அனுதாபம் தெரிவித்தோருக்கும், இன்றைய தினம் அந்தியேட்டிக்கிரியைகள் மற்றும் வீட்டுக்கிருத்திய கிரியைகளில் கலந்து கொண்டோருக்கும், இந் நினைவுப் பதிவேட்டிற்கான விடய தானங்கள் வழங்கியோருக்கும், அழகுற அமைத்த பதிப்பகத்தினருக்கும், நடைபெறும் மதிய போசனத்தில் கலந்து சிறப்பித்த எங்கள் உற்றார், உறவினர், சுற்றம், நண்பர்கள் அனைவருக்கும் எங்கள் நன்றிகள் உரித்தாகட்டும்.

**இங்ஙனம்**
**குடும்பத்தினர்.**

கற்பகம்
டச்சு வீதி,
வட்டுக்கோட்டை வடக்கு,
சித்தன்கேணி
23.02.2015




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org
சாய்ராம் பிறிண்டேர்ஸ், சங்கானை, யாழ்ப்பாணம், இலங்கை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org